


# தின பூமி

thinaboomi.com




வேலூர், வெள்ளி, செப்டம்பர் 22, 2023 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00



**ஐ.நா. வில் நிரந்தர உறுப்பினராக இந்தியாவுக்கு இங்கிலாந்து ஆதரவு**


...2-ம் பக்கம்

**கார்த்திகை தீப திருவிழா: தி.மலை அருணாசலேஸ்வரர் கோவிலில் நடந்த பந்தக்கால் நடும் நிகழ்ச்சி**

...3-ம் பக்கம்

**ஆசிய விளையாட்டு பெண்கள் கிரிக்கெட்: இந்தியா-மலேசியா இடையிலான ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது**

...7-ம் பக்கம்





நெல்லை-சென்னைக்கு வந்தே பாரத் ரயில் வரும் 24-ம் தேதி முதல் இயக்கப்பட உள்ளது. இந்த புதிய ரயில் சோதனை ஓட்டமாக மதுரை ரயில் நிலையத்திற்கு நேற்று வந்து சேர்ந்த போது எடுத்தபடம். (உள் படத்தில் அழகிய இருக்கைகளை காணலாம்.)

# சென்னையில் நடைபெற்று வரும் சாலைப் பணிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

சென்னை, செப். 22-

சென்னையில் நடைபெற்று வரும் சாலைப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

சென்னையில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகளை முதல்வர் நேற்று ஆய்வு செய்தார். மடிப்பாக்கம், முகலிவாக்கம், கொளப்பாக்கம், ராமாபுரம், வேளச்சேரி, பெருங்குடி, ஆலந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், கழிவுநீர் கால்வாய் பணிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் உள்ள குறைபாடுகளை முதல்வரிடம் எடுத்துரைத்தனர். இதில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, அமைச்சர்கள் கே.என். நேரு, மா. சுப்பிரமணியம், சென்னை மேயர் பிரியா, மாநகராட்சி ஆணையர் ராதா கிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கும் முன்பே சாலைப் பணிகளை முடிக்க உத்தரவிட்டிருந்த நிலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டது குறிப்பிடத்தகக்து. மேலும் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தினார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

கடந்த 19-ம் தேதி நடந்த ஆய்வுக்கூட்டத்தில் கூறியிருந்ததையொட்டி, தென்சென்னையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை நேற்று நேரில் சென்று ஆய்வு செய்தேன். மழைநீர் வடிகால், மெட்ரோ ரெயில், மின்வாரியம், குடிநீர் வாரியம் உள்ளிட்ட பணிகளை உரிய திட்டமிடுதலுடன் பொதுமக்கள் சிரமத்திற்குள்ளாகாத வகையில் மேற்கொண்டு, சாலைகளை விரைவாகவும் தரமாகவும் அமைத்திட அமைச்சர்களையும் - அதிகாரிகளையும் அறிவுறுத்தியுள்ளேன்.

மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இனி, வாரந்தோறும் தலைமைச் செயலாளர் ஆய்வுக்கூட்டம் நடத்திடவும் உத்தரவிட்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

### காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுப்படி

# தமிழ்நாட்டுக்கு உரிய நீரை திறந்து விடவேண்டும்

## கர்நாடக அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

புதுடெல்லி, செப்.22-

காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுப்படி தமிழ்நாட்டிற்கு உரிய தண்ணீரை திறந்து விட வேண்டும் என்று கர்நாடக அரசின் கோரிக்கையை நிராகரித்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

காவிரி நதிநீர் பங்கீட்டில் கர்நாடக அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே பிரச்சினை நீடித்து வருகிறது. இந்த நிலையில், நடப்பாண்டு ஆகஸ்டு மாதத்துக்கான நதிநீர் பங்கை கர்நாடகம் வழங்க மறுப்பதாக கூறி சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு சார்பில் ஆகஸ்டு 14-ம் தேதி மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை கடந்த ஆகஸ்டு 25-ம் தேதி விசாரித்த சுப்ரீம்கோர்ட் காவிரி மேலாண்மை ஆணையம் அறிக்கை அளிக்க உத்தரவிட்டு வழக்கை செப்டம்பர் 1-ம் தேதிக்கு ஒத்திவைத்திருந்தது. அதன்பிறகு வழக்கு செப்டம்பர் 1-ம் தேதி விசாரணைக்கு பட்டியலிடப்பட்டதால் தமிழக அரசின் தரப்பில் சுப்ரீம்கோர்ட்டில் முறையிடப்பட்டது.

அப்போது, நீதிபதிகள் அமர்வு, இந்த விவகாரம் செப்டம்பர் 6-ம் தேதி விசாரிக்கப்படும் என கூறி இருந்தனர். இந்த நிலையில் செப்டம்பர் 6-ம் தேதி சுப்ரீம்கோர்ட்டில் விசாரிக்கப்படும் வழக்குகள் பட்டியலில் இந்த விவகாரம் இடம் பெற்றிருந்தது.

ஆனால், அந்த அமர்வில் இடம்பெற்றிருந்த நீதிபதி பி.எஸ். நரசிம்மா விடுமுறையில் இருந்ததால், அந்த வழக்கு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, சுப்ரீம்கோர்ட்டு நீதிபதி பி.ஆர். கவாய் அமர்வு முன் இந்த விவகாரத்தை தமிழகத்தின் தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல்கள் குறிப்பிட்டு உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

அப்போது, நீதிபதி பி.ஆர்.கவாய் செப்டம்பர் 21-ம் தேதி இந்த விவகாரம் விசாரணைக்குப் பட்டியலிடப்படும் என்று கூறி இருந்தார். அதன்படி இந்த வழக்கு சுப்ரீம்கோர்ட்டில் நேற்று விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு இருந்தது.

அதன்படி நீதிபதிகள் பி.ஆர். கவாய், பி.எஸ். நரசிம்மா, பிரசாந்த் குமார் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை நேற்று விசாரித்தது. தமிழக அரசு சார்பில் வக்கீல்கள் முகுல் ரோத்தகி, வில்சன், உமாபதி ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

அப்போது அவர்கள், ஆகஸ்டு மாதம் முதல் தண்ணீர் திறப்பதில் கர்நாடகா பிரச்சினை செய்து வருகிறது. காவிரி ஆணையத்தின் உத்தரவை கர்நாடகம் செயல்படுத்துவதில்லை. தற்போதைய சூழலில் கர்நாடகா அணைகளில் இருக்கும் நீரின் அளவைப் பொறுத்து பார்த்தாலும், தமிழகத்துக்கு 6400 கன அடி தண்ணீரை திறந்து விட வாய்ப்பு உள்ளது என காவிரி மேலாண்மை ஆணையம் முதலில் கூறியது.

இருப்பினும் 5 ஆயிரம் கன அடி நீரை தமிழகத்துக்கு திறந்து விட்டால் போதும் என கர்நாடகாவுக்கு உத்தரவிட்டனர். ஆனால்

(கடைசி பக்கம் பார்க்க)

# அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே பிரச்சினை ஏதும் இல்லை

## கோவையில் அண்ணாமலை பேட்டி

கோவை, செப். 22-

அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே பிரச்சினை இருப்பதாக தெரியவில்லை என்றும், யாரையும் நான் தவறாக பேசவில்லை என்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது,

மகளிர் இடஒதுக்கீடு மசோதா மக்களவையில் நிறைவேற்றியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பாஜ.க. ஆட்சியில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது. தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு மகளிர் இடஒதுக்கீடு நடைமுறைக்கு வரும். 50 ஆண்டுகளாக தொகுதி மறுவரையறை செய்யப்படவில்லை.

அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே பிரச்சினை இருப்பதாக தெரியவில்லை. அ.தி.மு.க. தலைவர்கள் மற்றும் அண்ணாமலை இடையே பிரச்சினை இருப்பதாக நினைக்கிறேன். மோடி பிரதமராக வேண்டும் என்பதை அ.தி.மு.க. தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். பிரதமர் மோடியை ஆதரிப்பவர்களை நானும் ஆதரிப்பேன். இதில் மாற்றுக் கருத்தே இல்லை.

எனது அரசியலில் நான் தெளிவாக இருக்கிறேன். தன்மானமே எனக்கு முக்கியம். எனக்கு யாருடனும் பிரச்சினை இல்லை. யாரையும் நான் தவறாக பேசவில்லை. கூட்டணி தொடர்பாக அ.தி.மு.க. பேசிய கருத்துக்கு நான் பதிலளிக்க முடியாது.

அண்ணா பற்றி நான் பேசிய கருத்து சரியானது தான். அதற்காக மன்னிப்பு கேட்க மாட்டேன். நான் பேசியதில் தவறே இல்லை. வரலாறு ரீதியாக நடந்த விஷயத்தை பேசினேன். அண்ணா குறித்த செய்திக்கு மறுப்பு தெரிவித்த தனியார் செய்தி குழுமம் கூறியதை நான் ஏற்க மாட்டேன். அண்ணா குறித்து வந்த செய்திகள், வரலாறுகளை நான் வெளியிடத் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பாராளுமன்ற வரலாற்றில் பொன்னான தருணம்

## மகளிர் மசோதா குறித்து பிரதமர் மோடி பேச்சு

புதுடெல்லி, செப். 22-

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை ஒருமனதாக நிறைவேற்றியதற்காக நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மோடி, பாராளுமன்ற வரலாற்றில் இது ஒரு பொன்னான தருணம் என்று கூறினார்.

பாராளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரின் நான்காவது நாளில் நேற்று மக்களவைக் கூடியது. அப்போது சிறிய உரையாற்றுவதற்காக எழுந்த பிரதமர் மோடி, இந்த அவையின் தலைவர் என்ற முறையில் இந்தப் புனிதமான பணியில் பங்களிப்பு செய்த, ஆதரவளித்த, ஆக்கபூர்வமாக விவாதித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமான மசோதா நிறைவேற்றியதன் பெருமை, அவையின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் சேரும்.

இந்த பாராளுமன்ற முடிவுகள் தாய் சக்தியின் நிலையை மாற்றும். அது உருவாக்கும் நம்பிக்கை, நாட்டை கற்பனை செய்ய முடியாத அளவிலான உயரத்துக்கு எடுத்துச் செல்வதற்கான சக்தியாக உருவெடுக்கும் என்று பிரதமர் மோடி நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

### மக்களவையில் நிறைவேறிய நிலையில்

# மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் தாக்கல்

## எதிர்க்கட்சிகள் காரசார விவாதம்

புதுடெல்லி, செப். 22-

பாராளுமன்ற மக்களவையில் மகளிருக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறிய நிலையில் நேற்று மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இதை தொடர்ந்து மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகளின் காரசார விவாதம் நடைபெற்றது.

மக்களவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா நேற்று மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது பேசிய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பிறகே 33 சதவீத இட ஒதுக்கீடு அமலாகும் என்று தெரிவித்தார். இதையடுத்து மசோதா மீது அனைத்து கட்சி எம்பிக்களும் பேசினர்.

பாராளுமன்ற 5 நாள் சிறப்புக் கூட்டத் தொடர் கடந்த 18-ம் தேதி தொடங்கியது. முதல் நாள் நடைபெற்ற கூட்டத்தை அடுத்து மத்திய அமைச்சரவை கூட்டம் கூட்டப்பட்டது. கடந்த 18-ம் தேதி பாராளுமன்ற பழைய கட்டிடத்திற்கு பிரதமர் மோடி, எம்.பி.க்கள் பிரியா விடை கொடுத்து விட்டு பாராளுமன்ற புதிய கட்டிடத்திற்கு சென்று அவை நடவடிக்கைகளை தொடங்கினர். அப்போது மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்களவையில், பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை தாக்கல் செய்தார். அப்போது பேசிய பிரதமர் மோடி, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு அனைத்து கட்சி எம்.பி.க்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மக்களவையில் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா மீதான விவாதம் தொடங்கி நடைபெற்றது. இந்த விவாதத்தில் பல்வேறு கட்சிகளை சேர்ந்த 27 பெண் எம்.பி.க்கள் மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்து பேசினார்கள். இறுதியாக நடைபெற்ற வாக்கெடுப்பில் 454 எம்.பி.க்கள் ஆதரவாகவும், மஜ்லிஸ் கட்சியை சேர்ந்த 2 எம்.பி.க்கள் இதற்கு எதிராகவும் வாக்களித்தனர். நடப்பு சிறப்பு கூட்டத்தொடரில் மக்களவையில் முதலாவதாக நிறைவேற்றப்பட்ட மசோதா இதுவாகும்.


புதிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட முதல் மசோதா என்ற பெருமையையும் இம்மசோதா பெற்றது. மக்களவையை தொடர்ந்து நேற்று மாநிலங்களவையில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இங்கும் மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் மசோதாவை தாக்கல் செய்தார். அப்போது அவர் பேசுகையில், இந்த அரசியலமைப்பு திருத்த மசோதா மூலம் சட்ட விதிகள் 330, 332 மற்றும் 334-ல் கூடுதலாக ஒரு பிரிவு சேர்க்கப்படும். இதன் மூலம் பாராளுமன்றம் மற்றும் நாட்டில் உள்ள அனைத்து சட்டப்பேரவைகளில் 3-ல் 1 பங்கு இடம் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

இந்த இட ஒதுக்கீடு, எஸ்.சி மற்றும் எஸ்.டி பிரிவு பெண்களுக்கும் பொருந்தும். இது வரலாற்று சிறப்புமிக்க முயற்சியாகும். மகளிருக்கான இந்த இட ஒதுக்கீடு மசோதா பெண்களுக்கு சமவாய்ப்பை ஏற்படுத்தும். இதனை அமல்படுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் அது தொடர்பான வரையறை அவசியமானதாகும் என்றார்.


அதனைத்தொடர்ந்து பா.ஜ. எம்.பி.யும் அந்த கட்சியின் தேசிய தலைவருமான ஜே.பி. நட்டா மசோதா மீதான விவாதத்தை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர், அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க இந்த இட ஒதுக்கீடு மசோதா உறுதியளித்துள்ளது. காங்கிரஸ் கட்சியை விட அதிகளவு ஓ.பி.சி பிரிவை சேர்ந்த எம்.பி.க்கள் எங்கள் கட்சியில் உள்ளனர் என்றார்.

தொடர்ந்து மசோதா மீது காரசார விவாதம் நடைபெற்றது. இங்கும் அனைத்து கட்சிகளின் பெண் எம்.பி.க்கள் மசோதா மீது காரசாரமாக பேசினர். விவாதத்துக்கு பின்னர் மாநிலங்களவையில் இந்த மசோதா வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதி பரிசீலனைக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும். அவரின் ஒப்புதலுக்கு பிறகு இந்த மசோதா உடனடியாக சட்டமாக மாறும்.

**மார்க்கெட் விலை நிலவரம்**




| BSE | NSE |
|---|---|
| -570.60 | -159.05 |
| பாயின்ட் 66230.24 | பாயின்ட் 19742.35 |



**தங்கம்**

1 சவரன் ₹ 44,240

1 கிராம் ₹ 5,530



**வெள்ளி**

1 கிலோ ₹ 78,000

1 கிராம் ₹ 78.00

**டாலர்** ₹ 83.14

**பெட்ரோல்** ₹ 102.63

**டீசல்** ₹ 94.24



# பிரேசில் அதிபருடன் முதன்முறையாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சந்திப்பு

## இருதரப்பு உறவுகள் பற்றி ஆலோசனை

**நியூயார்க், செப். 22-**

பிரேசில் அதிபருடன் முதன்முறையாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சந்தித்து இருதரப்பு உறவுகளை பற்றி பேசினார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடந்த 78-வது ஐ.நா. பொது சபை கூட்டத்தொடரில் உறுப்பு நாடுகள் கலந்து கொண்டன. இந்த கூட்டத்தொடரில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கலந்து கொண்டு பேசினார். அவர் பேசும் போது,

உக்ரைனில் ரஷ்யா இனப்படுகொலையில் ஈடுபடுகிறது. ரஷ்யா பல விஷயங்களை ஆயுதங்களாக மாற்றி, தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது. அந்த விஷயங்கள் எங்களுடைய நாட்டுக்கு எதிராக மட்டுமின்றி, உங்களுக்கும் (ஐ.நா. பொது சபை உறுப்பு நாடுகள்) கூட எதிராக பயன்படுத்தப்படுகிறது என கூறினார். பயங்கரவாதிகள் அணு ஆயுதங்களை வைத்திருக்க எந்த உரிமையும் இல்லை என்றும் அவர் ரஷ்யாவை சாடினார்.

இந்த கூட்டத்தின் ஒரு பகுதியாக, பிரேசில் நாட்டு அதிபரான லூயிஸ் இனேசியோ லூலா டா சில்வாவை, ஜெலன்ஸ்கி நேரில் சந்தித்து பேசினார். அப்போது, இரு நாடுகளுக்கு



இடையேயான அமைதியை கட்டியெழுப்புவதற்கான பாதையை வகுப்பதின் முக்கியத்துவம் மற்றும் பேச்சுவார்த்தையை மேம்படுத்துவது ஆகியவை பற்றி இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

இரு நாடுகளின் தலைவர்களும் தனிப்பட்ட முறையில் சந்தித்து கொள்வது இது முதன்முறை என்று சி.என்.என். செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது.

இந்த சந்திப்பை அடுத்து, இருதரப்பு உறவுகள் மற்றும் அமைதி முயற்சிகளில் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் பணியாற்றும்படி எங்களுடைய தூதரக குழுவினரை அறிவுறுத்தி உள்ளோம் என்று ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

# கோவை மத்திய சிறையில் கைதிகள் - வார்டன்கள் மோதல்

**கோவை, செப். 22-**

கோவை மத்திய சிறையில் வார்டன்கள் மற்றும் கைதிகளிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தை தொடர்ந்து அங்கு சிறைத்துறை டி.ஐ.ஜி. சண்முகசுந்தரம் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்.

கோவை மாநகரில் செயல்பட்டு வரும் மத்திய சிறையில் தண்டனை கைதிகள், விசாரணை கைதிகள் என 2500-க்கும் மேற்பட்டோர் உள்ளனர். இங்கு தடையை மீறி புகையிலை பொருட்கள், கஞ்சா, செல்போன் உள்ளிட்டவை பயன்படுத்தப்படுவதாக புகார்கள் வந்த வண்ணம் இருந்தன.

இதனை தொடர்ந்து சிறைத்துறை அதிகாரிகள் சிறையில் அடிக்கடி சோதனை மேற்கொண்டு வருகின்றனர். இருந்த போதிலும் அவை பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிகிறது. இதனால் தினமும் சிறையில் உள்ள அத்தனை வளாகங்களிலும் அங்கிருக்கும் வார்டன்கள் அனைவரும் ரோந்து செல்வது வழக்கம்.

அதன்படி நேற்று காலை சிறையில் பணியில் இருந்த 2 வார்டன்கள் மத்திய சிறையில் உள்ள வால்மேடு என அழைக்கப்படும் தண்டனை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள பிளாக்கில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். ஒவ்வொரு அறையாக சென்று சோதனை செய்தனர்.

அப்போது ஒரு அறையில் இருந்த சிலர், சோதனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் வார்டன்களுக்கும், கைதிகளும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு தகராறாக மாறியது. இவர்களது சத்தம் கேட்டு சக வார்டன்கள் ஓடி வந்தனர். மேலும் ஏராளமான கைதிகளும் திரண்டு விட்டனர்.

கைதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு, வார்டன்களுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி தகராறு செய்தனர். இருதரப்பினருக்கும் வாக்குவாதம் முற்றவே ஒருவருக்கொருவர் தாக்கிக்கொண்டு தள்ளுமுள்ளுவில் ஈடுபட்டனர். இதனால் அந்த பகுதியே போர்க்களம் போல காட்சியளித்தது.

கைதிகளில் சிலர் மரங்களின் மீது ஏறி அமர்ந்து கொண்டு இதுபோன்று தொல்லை கொடுத்தால் கைகளை அறுத்து கொள்வோம் என கூறி கைகளை அறுத்து மிரட்டல் விடுத்தனர். மேலும் சில கைதிகள் வார்டன்களை தாக்கினர்.

இதில் மோகன்ராஜ், பாபு ஜான், விமல்ராஜ், ராகுல் ஆகிய 4 வார்டன்களும் காயம் அடைந்தனர். தகவல் அறிந்ததும் சிறைத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து காயம் அடைந்த 4 வார்டன்களையும் மீட்டு கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு அனுப்பினர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதே போல் காயம் அடைந்த கைதிகள் 7 பேர் சிறை வளாகத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வார்டன்கள், கைதிகள் இடையே ஏற்பட்ட தள்ளுமுள்ளு சம்பவத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக சிறைத்துறை டி.ஐ.ஜி. சண்முகசுந்தரம் விசாரணை நடத்தி வருகிறார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நீட் தேர்வின் பலன் பூஜ்யம் என்பதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்

**சென்னை, செப். 22-**

நீட் தேர்வின் பலன் பூஜ்யம் என்பதை மத்திய பா.ஜ.க. அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

நீட் முதுநிலை தேர்வில் தகுதி மதிப்பெண் (கட் ஆப்) பூஜ்யமாக குறைக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வில் பூஜ்யம் மதிப்பெண் எடுத்திருந்தாலும் எம்.டி, எம்.எஸ்., படிப்புக்கான கலந்தாய்வில் பங்கேற்கலாம் என்று மத்திய அரசின் மருத்துவ கலந்தாய்வுக் குழு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

நீட் தேர்வின் பலன் பூஜ்யம் என்பதை மத்திய பா.ஜ.க. அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. நீட் முதுநிலை தேர்வு கட்-ஆப்-ஐ பூஜ்யமாக குறைப்பதன் மூலம், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதி என்பது அர்த்தமற்றது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

இது பயிற்சி மையங்கள் மற்றும் தேர்வுக்கு பணம் செலுத்துவது பற்றியது. தகுதி தேவையில்லை. நீட் தேர்வுக்கும் தகுதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இதை நாம் காலம் காலமாக சொல்லி வருகிறோம். இது வெறும் சம்பிரதாயமாக மாறி விட்டது, உண்மையான தகுதிக்கான அளவுகோல்கள் எதுவும் நீட் தேர்வில் இல்லை.

விலைமதிப்பற்ற பல உயிர்கள் பலியாகியும் மனம் தளராத மத்திய பா.ஜ.க. அரசு, தற்போது இப்படி ஒரு உத்தரவை கொண்டு வந்துள்ளது. நீட் தேர்வு என்ற பலிபீடம் மூலம் உயிரிழப்புகளை ஏற்படுத்தியதற்காக பா.ஜ.க. அரசை அகற்ற வேண்டும் என்று அந்த பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### நீட் தேர்வால் பூஜ்யம்தான் பலன்:

# முதல்வர் ஸ்டாலின் கருத்துக்கு புதுவை கவர்னர் தமிழிசை பதில்

**சென்னை, செப். 22-**

நீட் தேர்வால் பூஜ்யம் தான் பலன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் டுவிட்டர் பதிவில் கூறி இருந்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில் தெலுங்கானா கவர்னர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் பதில் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

மருத்துவ முதுநிலை படிப்புகளில் சேர்வதற்கான நீட் தேர்வில் பூஜ்யம் மதிப்பெண்கள் எடுத்திருந்தாலும் அவர்களுக்கு கல்லூரியில் சேர இடம் வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளதை போல தவறாக விமர்சிப்பவர்களுக்கு நீட் தேர்வு கட் ஆப் மதிப்பெண், பூஜ்ஜியம் பர்சன்டைல் என்றால் என்ன? என்பதை பற்றிய புரிதல் முதலில் அறிந்து கொள்ளவும்.

நீட் தேர்வை பற்றிய புரிதல் இன்றி நீட் தேர்வை ஒழிப்பதாக கூறிக் கொண்டிருப்பவர்களுக்கு இதை பற்றிய புரிதல் இல்லாதது ஒன்றும் ஆச்சரியமல்ல? நீட் தேர்வில் பூஜ்யம் மதிப்பெண் பெற்றவர்களுக்கு மருத்துவம் மேற்படிப்பு படிக்க இடம் கிடைக்காது என்பது நிதர்சனமான உண்மை.

நீட் தேர்வில் வெற்றி பெற குறைந்தபட்ச மதிப்பெண் எடுத்தால் மட்டுமே மருத்துவ மேற்படிப்பில் சேரலாம். இந்தியாவில் நீட் தேர்வு எழுதி வெற்றி பெறுபவர்கள் அனைவருக்குமே மருத்துவ மேற்படிப்பு படிக்க இடம் கிடைப்பதில்லை.

மருத்துவ மேற்படிப்பில் நீட் தேர்வில் உச்சபட்ச மதிப்பெண்கள் பெற்றவர்கள் மருத்துவ மேற்படிப்பு படிக்க முன்னுரிமை உள்ளது. அத்தகைய இடங்கள் முழுமையாக நிரம்பிய பின்னர் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கு கட்ஆப் மதிப்பெண்கள் பெற முடியாத மாணவர்கள் பயன்பெறும் வகையில் குறைந்தபட்ச மதிப்பெண்கள் பெற்று நீட் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் காலியாக உள்ள இடங்களை பயன்படுத்திக் கொள்ளும் இந்த முறையை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

இதன் புரிதல் மிக அவசியம். நீட் தேர்வில் பூஜ்யம் மதிப்பெண் எடுத்தவர்களுக்கு நிச்சயம் மருத்துவ படிப்பில் இடம் கிடைக்காது. குறைந்தபட்ச மதிப்பெண்கள் பெற்று காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கே இந்த முறை. இதை விமர்சிப்பவர்களுக்கு இதை பற்றிய புரிதல் மிக அவசியம்.

இதைப்பற்றி புரிதல் இல்லாமல் மக்களையும், மாணவர்களையும் குழப்பி மாணவச் செல்வங்களிடம் தவறான எண்ணங்களை கொண்டு சேர்க்கின்றனர். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஐ.நா.வில் நிரந்தர உறுப்பினராக இந்தியாவுக்கு இங்கிலாந்து ஆதரவு

**நியூயார்க், செப். 22-**

இந்தியா, பிரேசில், ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்களாக வேண்டும் என்று இங்கிலாந்து தெரிவித்து உள்ளது.

இங்கிலாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் கிளெவர்லி ஐ.நா.வின் வெளிநாட்டு உறவுகளுக்கான கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது,

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். உலகம் நமக்கு முன் வைத்துள்ள சவால்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. ஆனால், நேர்மறையான வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்பும் நம்மிடம் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை நாம் மீண்டும் அடைவதற்கான வாய்ப்பும் நமக்கு உள்ளது.

இதற்கு பொருள் என்னவெனில், நம்முடைய பாரம்பரிய நண்பர்கள் மற்றும் கூட்டணி நாடுகளுடன் நாம் இணைந்து பணியாற்ற வேண்டும். ஆனால், உலகில் எழுச்சி பெற்று வரும் சக்தி படைத்த நாடுகளுக்கும் நாம் குரல் கொடுக்க வேண்டும் என கூறினார்.

தொடர்ந்து அவர், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என இங்கிலாந்து ஊக்குவித்து வருகிறது. இதன்படி, இந்தியா, பிரேசில், ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஐ.நா.வின் நிரந்தர உறுப்பினர்களாக வேண்டும் என்று நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். உலக அரங்கில் ஓர் உயர்ந்த குரலாக இடம் பெற உண்மையில் ஆப்பிரிக்காவும் தகுதி வாய்ந்தது என்றும் அவர் கூறினார்.

# விதிகளை மீறி ஆடை அணிந்தால் பெண்களுக்கு 10 ஆண்டு ஜெயில்: ஈரான் அரசு அதிரடி உத்தரவு

**டெக்ரான், செப். 22-**

விதிகளை மீறி ஆடை அணிந்தால் பெண்களுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கும் மசோதா ஈரான் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

ஈரானில் ஆடை அணிவதில் விதிகளை மீறும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கக் கூடிய மசோதாவை ஈரான் பாராளுமன்றம் சமீபத்தில் நிறைவேற்றி உள்ளது. இந்த மசோதாவின் விதிகளின்படி, பொது இடங்களில் தகாத முறையில் உடை அணிந்தவர்களுக்கு 10 ஆண்டு வரை சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

ஈரானின் தண்டனைச் சட்டத்தின்படி 180 மில்லியன் முதல் 360 மில்லியன் ரியால்கள் வரை அபராதம் விதிக்கப்படும்.

இந்த மசோதா சட்டமாக மாறுவதற்கு முன்பு கார்டியன் கவுன்சிலின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இந்த மசோதா அரசியலமைப்பு மற்றும் ஷரியாவுக்கு முரணானது என்று கருதினால் அதை தடுக்கும் அதிகாரம் அவர்களுக்கு உள்ளது.

இந்த ஹிஜாப் மசோதா 152-க்கு 34 என்ற பாராளுமன்ற வாக்கெடுப்பு மூலமாக நிறைவேற்றப்பட்டு உள்ளது. மேலும் பெண் டிரைவர் அல்லது பயணிகள் ஆடைக் கட்டுப்பாட்டை மீறினால் வாகன உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஈரான் சட்டப்படி இளம் பெண்கள், சிறுமிகள் தங்கள் தலைமுடியை ஹிஜாப் மூலம் மறைக்க வேண்டும். அவர்களின் உடலை மறைக்க நீண்ட, தளர்வான ஆடைகளை அணிய வேண்டும் என்று கூறப்படுகிறது.

முறையற்ற ஹிஜாப் அணிந்ததற்காக போலீசாரால் காவலில் வைக்கப்பட்டிருந்த மாஷா அமினி மரணம் தொடர்பாக எதிர்ப்புக்கள் வெடித்த ஒரு வருடத்திற்குப் பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆந்திர சட்டசபையில் பரபரப்பு:

# தொடையை தட்டி சவால் விட்ட நடிகர் பாலகிருஷ்ணா

**திருப்பதி, செப். 22-**

ஆந்திர சட்டசபை நேற்று கூடிய போது முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடிகர் பாலகிருஷ்ணா தொடையை தட்டி சவால் விட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சி தலைவரும் முன்னாள் முதல்வருமான சந்திரபாபு நாயுடு, திறன் மேம்பாட்டு கழக ஊழல் வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரது கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து தெலுங்கு தேசம், ஜனசேனா கட்சியினர் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஆந்திர சட்டசபை நேற்று கூடிய போது சட்டசபைக்கு வந்த தெலுங்கு தேசம் கட்சி எம்.எல்.ஏ.க்கள் சந்திரபாபு நாயுடு கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து சபாநாயகர் இருக்கை அருகில் சென்று பேப்பர்கள் மற்றும் குடிநீர் பாட்டில்களை வீசி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பிரபல நடிகரும் தெலுங்கு தேசம் கட்சியின் இந்துபுரம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான நடிகர் பாலகிருஷ்ணா எழுந்து நின்று தொடையை தட்டி மீசையை முறுக்கியபடி ஆவேசமாக பேசினார். ஆதாரமின்றி சந்திரபாபு நாயுடுவை கைது செய்து இருக்கிறீர்கள். முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி சட்டசபைக்கு வந்து இதற்கு பதில் அளிக்க வேண்டும் என பேசினார்.

இதனைக் கேட்டு ஆத்திரம் அடைந்த ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் எதிர் கோஷமிட்டனர். இதனால் சட்டசபையில் கடும் அமளி ஏற்பட்டது.

அப்போது நீர்வளத்துறை அமைச்சர் அம்பாதி ராம் பாபு எழுந்து இது போன்ற செயல்களை சினிமா நடிப்பதில் வைத்துக் கொள்ளுங்கள். சட்டசபைக்குள் இது போன்று நடந்து கொள்ளக் கூடாது என தெரிவித்தார். அதை தொடர்ந்து நடிகர் பாலகிருஷ்ணா, அம்பதி ராம்பாபு இருவரும் மாறி மாறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் சட்டசபையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# பாகிஸ்தானில் வரும் ஜனவரி மாதம் பொதுத்தேர்தல்

**இஸ்லமாபாத், செப். 22-**

பாகிஸ்தானில் வரும் ஜனவரி மாதம் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அந்த நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றம் கடந்த ஆகஸ்ட் மாதம் கலைக்கப்பட்டது. தற்போது பாகிஸ்தானில் காபந்து பிரதமராக எம்பி அன்வர்-உல்-ஹக் கக்கர் உள்ளார். இந்த நிலையில், பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. அக்டோபர் மாதம் தேர்தல் முதலில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது ஜனவரி மாதம் தேர்தல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**22-09-2023**




**மேஷம்:-** பணியிட மாற்றங்களை எதிர்பார்க்கலாம். தவறான வழிகளில் பணம் வரலாம். நட்பு, உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**ரிஷபம்:-** மனைவி மூலம் தனவரவு அதிகரிக்கும். சிலரின் காதல் வெற்றி பெற்று கல்யாணத்தில் முடியும். வியாபாரிகள் தங்கள் சாதுர்யமான பேச்சால் அதிகம் இலாபம் ஈட்டுவர்.

**மிதுனம்:-** தொழிலால் தனவரவு அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். பயண சுகம் ஏற்படும். தனக்கென அழகிய தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**கடகம்:-** தீய செயல்களால், கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

**சிம்மம்:-** அம்மாவின் பேச்சை கேட்டு நடந்தால் நிம்மதி ஏற்படும். தூக்கமின்மையால் சோர்வு ஏற்பட்டு முக்கிய பணிகளில் சுணக்கம் ஏற்படும். பொருட்களைப் பத்திரமாகப் பாதுகாப்பது அவசியம்.

**கன்னி:-** உடன் பிறப்புக்களின் ஒற்றுமை ஓங்கும். கோவில், குளம் பணிகளில் ஈடுபாடு கொள்வார்கள். அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். சுற்றுலாப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள்.

**துலாம்:-** வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவோடு நடப்பது பதவி உயர்வுக்கு உதவும்.. வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியம்.

**விருச்சிகம்:-** உங்கள் குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். கல்வியில் தேர்ச்சியும், வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். பெரியோரின் அன்பு பொங்கும். தொழில் வளம் பெருகும்.

**தனுசு:-** பெண்கள் மூலம் விரயச் செலவுகள் ஏற்படும். தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவிக்காமல் செலவுகளைக் குறையுங்கள். தேவையற்ற அலைச்சல்கள் தவிர்க்க முடியாததாகும்.

**மகரம்:-** மனமகிழ்ச்சி அதிகரிக்கும் வண்ணம் தனவரவு அதிகரிக்கும். ஆரோக்கிய மேம்பாட்டால் ஆனந்தம் பெருகும். பிரிவால் ஏற்பட்ட துன்பம், இணைவால் மாறும்.

**கும்பம்:-** அரசு ஆதரவால் உத்தியோக வாய்ப்புகள் பெருகி, வாழ்க்கையில் முன்னேறும் நிலை உருவாகும். புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும். தன்னம்பிக்கை, தேகதிடம், தைரியம் ஆகியவை ஓங்கும்.

**மீனம்:-** அனைத்துச் செயல்களிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். உல்லாசமான புனிதப் பயணங்கள் ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்

### பாரதப்பிரதமராக மோடிஜியும்,

# தமிழகத்தின் முதல்வராக எடப்பாடியாரும் வரவேண்டும்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி

**மதுரை செப் -22**

நாட்டின் பாரதப் பிரதமராக மோடி ஜியும், தமிழகத்தின் முதல்வராக எடப்பாடியாரும் வரவேண்டும் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.தெரிவித்தார்.

மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.அலுவலகத்தில் தே.மு.தி.க.வைச் சேர்ந்த விவேக் விஸ்வா, முருகேசன் உள்ளிட்ட 10- க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி வி.பி.ஆர்.செல்வகுமார் ஏற்பாட்டில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. முன்னிலையில் அ.தி.மு.க.வில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

மதுரை மாநகர் மாவட்ட பா.ஜ.க.மாவட்ட துணைத்தலைவர் கே.ஜெயவேல், மாவட்ட இளைஞர் அணி தலவைர் பாரி, செயற்குழு உறுப்பினர் ரவி ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை அ.தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டின், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சரவணன், வி.பி.ஆர்.செல்வகுமார், கு.திரவியம், சக்தி விநாயகர் பாண்டின், சண்முகவள்ளி, சுகந்திஅசோக், எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெ.மாணிக்கம், மகேந்திரன், மீனா, சேகர், வக்கீல் முருகராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் செல்லூர் கே. ராஜூ நிருபர்களிடம் கூறியதாவது-

தி.மு.க. சேர்ந்த நிர்வாகி



கூட கழகத்தில் சேரவிருப்பம் தெரிவித்துள்ளனர் இன்றைக்கு தே.மு.தி.க, பி.ஜே.பி.யை சேர்ந்த பலர் இணைந்துள்ளனர் .இவர்கள் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலுக்கும், அதனை தொடர்ந்து எடப்பாடியாரை தமிழகத்தின் முதலமைச்சராக வருவதற்கு பாடுபடுவோம்என்று கூறியுள்ளார்கள் .அண்ணா காலத்திலே சனாதனம் ஒழிக்கப்பட்டது பல்வேறு மாற்றங்கள் வந்தது சீர்திருத்த திருமணங்களை அண்ணா செய்து வைத்தார். அதனை தொடர்ந்து இருமொழி கொள்கை கடைபிடிக்கப்பட்டது இன்றைக்கு அதிமுகவில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் தலைவராக உள்ளார் இதேபோல் திமுகவில் சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்களையும், பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்கள் தலைவராக முடியுமா.பிஜேபி எங்களுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை திமுகவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் கொள்கைகளை அடமான வைத்துள்ளது

நாங்கள் தேவரை தெய்வமாக வணங்குகிறோம். தேவருக்கு தங்க கவசத்தை அம்மா வழங்கினார்கள்.கர்நாடகா தேர்தலில் பெண்களுக்கு 2000 ரூபாய் வழங்கும் என கூறினார்கள் தற்போது ஒரு கோடியே 30 லட்சம் பேருக்கு வழங்கி விட்டார்கள்.ஆனால் தமிழகத்தில் 2 கோடியே 18 லட்சம் குடும்பங்கள் உள்ளது இதில் ஒரு கோடி பேருக்கு வழங்கிவிட்டு மித்தவருக்கு வழங்கவில்லை .மதுரை எம்ஜிஆர் விளையாட்டு திடலில் விளையாட்டு வீரர்கள் தங்க தங்க விடுதி, ஓய்வு அறை அமைக்க வேண்டும் என்று கூறினோம். இதுவரை எந்த நடவடிக்கை இல்லை அதே போல் ஒவ்வொரு தொகுதியிலும் விளையாட்டு திடல் அமைக்கப்படும் என உதயநிதி கூறினார் எனது தொகுதியில் ஜெயஹந்த்புரத்திலுஇடத்தை தேர்வு செய்து கொடுத்தேன் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இன்றைக்கு டெங்கு மலேரியா போன்ற நோய்களுக்கு எந்த நடவடிக்கையும் இல்லை. மதுரைக்கு 2 நாள் முகாம்மிட்டுள்ள உதயநிதி ஸ்டாலின் சென்னை சென்ற பின் தனது தந்தையிடம் சொல்ஸி மதுரைக்கு சிறப்பு நிதியை ஒதுக்க சொல்வாரா. .

பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீட்டை மோடிஜி கொண்டு வந்தார்.ஆனால் காங்கிரஸ் கொண்டு வர முடியவில்லை.மோடி ஜி நன்றாக தமிழ் பேசுகிறார் புதிய அவையில் கூட செங்கோல் வைத்து தமிழகத்தின் புகழை அறியச் செய்துள்ளார்.கடந்த 10 வருடம் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி இருந்தபோது எதையும் செய்யவில்லை முல்லைப் பெரியாறு, கட்சதீவு பற்றி கூட தீர்க்கவில்லை. மோடி ஜி பாரதப் பிரதமராகவும் தமிழகத்தில் எடப்பாடியார் முதலமைச்சர் வரவேண்டும். இவ்வாறு கூறினார்.

# வாரணாசியில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்

## பிரதமர் மோடி நாளை அடிக்கல் நாட்டுகிறார்

**வாரணாசி, செப். 22-**

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் நாளை 23-ம் தேதி சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டுகிறார்.

இந்த மைதானம் 30 ஏக்கர் பரப்பளவில் ரூ. 450 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் கட்டப்பட உள்ளது. கடவுள் சிவனை அடிப்படையாக கொண்டு இந்த விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

மேலும் திரிசூலம் வடிவிலான விளக்கு கோபுரங்கள், உடுக்கை வடிவிலான மையப் பகுதிகளும், பிறை நிலா வடிவிலான மேற்கூரைகளும் அமைய உள்ளதாக மாதிரி படங்கள் வெளியாகியுள்ளன. இந்த படங்கள் இணையத்தில் தற்போது வைரலாகி வருகிறது.

# விஜயவாடா – சென்னைக்கு புதிய வந்தே பாரத் ரெயில் வரும் 24-ம் தேதி முதல் இயக்கம்

**திருப்பதி, செப். 22-**

ஆந்திர மாநிலம் விஜயவாடா - சென்னை இடையே புதிய வந்தே பாரத் ரெயில் வருகிற 24-ம் தேதி முதல் இயக்கப்பட உள்ளது. இதன் தொடக்கவிழா விஜயவாடாவில் நடக்கிறது. பிரதமர் மோடி வீடியோ கன்பரன்சிங் மூலம் வந்தே பாரத் ரெயிலை தொடங்கி வைக்கிறார்.

விஜயவாடாவில் இருந்து குறைந்த நிறுத்தங்களுடன் சுமார் 6 மணி நேரம் 40 நிமிடங்களில் சென்னை வந்தடையும் என தெற்கு ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மறு மார்க்கமாக சென்னையில் இருந்து மீண்டும் விஜயவாடாவுக்கு வந்தே பாரத் ரெயில் இயக்கப்படுகிறது. சென்னை - விஜயவாடா இடையே குறைந்த நேரத்தில் ரெயில் இயக்கப்படுவதால் பயணிகளிடையே மிகுந்த வரவேற்பை பெரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கார்த்திகை தீப திருவிழா: தி.மலை

# அருணாசலேஸ்வரர் கோவிலில் நடந்த பந்தக்கால் நடும் நிகழ்ச்சி

**தி.மலை, செப். 22-**

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத் திருவிழாவுக்கான பூர்வாங்க பணிகளை செய்வதற்கான பந்தகால் நடும் நிகழ்ச்சி நேற்று சிறப்பாக நடைபெற்றது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீப திருவிழா வருகிற நவம்பர் மாதம் 14-ம் தேதி துர்க்கை அம்மன் உற்சவத்துடன் தொடங்குகிறது. மூலவர் சன்னதி முன்பு உள்ள தங்க கொடிமரத்தில் வரும் நவம்பர் 17-ம் தேதி கொடியேற்றம் நடைபெற்றதும், 10 நாள் உற்சவம் ஆரம்பமாகும். 7-ம் நாளில் மகா தேரோட்டம் நடைபெற உள்ளது.

கார்த்திகை தீப திருவிழாவின் முக்கிய நிகழ்வாக மலையே மகேசன் என போற்றப்படும் 2,668 அடி உயரமுள்ள அண்ணாமலையின் உச்சியில் வரும் நவம்பர் 26-ம் தேதி மாலை 6 மணிக்கு மகாதீபம் ஏற்றப்படுகிறது. ஜோதி வடிவில் அண்ணாமலையார் காட்சி கொடுப்பார். தொடர்ந்து, 11 நாட்களுக்கு மகா தீப தரிசனத்தை பக்தர்கள் காணலாம்.


கார்த்திகை தீபத்திருவிழாவை முன்னிட்டு பூர்வாங்க பணிகளுக்கான பந்தக்கால் நடும் முகூர்த்த நிகழ்ச்சி நேற்று காலை நடந்தது. பந்தக்கால் நடும் நிகழ்ச்சியை முன்னிட்டு அருணாசலேஸ்வரர் கோவிலில் உள்ள சம்பந்த விநாயகர் சன்னதியில் பந்தக்காலிற்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன.

பின்னர் தேரடி முனீஸ்வரர் கோவில் மற்றும் பஞ்ச மூர்த்திகளின் திருத்தேர்களுக்கு முன்பு வைத்து பூஜை செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து ராஜகோபுரம் முன்பு காலை 8.25 மணிக்கு துலா லக்னத்தில் பூர்வாங்க பணிகளை செய்வதற்கான பந்தக்கால் நடப்பட்டது.

இதில் மாவட்ட கலெக்டர் முருகேஷ், கோவில் இணை ஆணையர் ஜோதி, அறங்காவலர் குழு தலைவர் ஜீவானந்தம், உறுப்பினர்கள் டி.வி.எஸ். ராஜாராம், கோமதி குணசேகரன், சினம் பெருமாள், டாக்டர் மீனாட்சி சுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நிபா வைரஸ்: ட்ரூனாட் சோதனை நடத்த ஐ.சி.எம்.ஆர். அனுமதி

## கேரள அமைச்சர் வீணா ஜார்ஜ் தகவல்



**திருவனந்தபுரம், செப். 22-**

நிபா வைரஸ் பாதிப்பை கண்டறிய ட்ரூனாட் சோதனை நடத்த ஐ.சி.எம்.ஆர். ஒப்புதல் அளித்துள்ளதாக கேரள அமைச்சர் வீணா ஜார்ஜ் தகவல் தெரிவித்துள்ளார்

கேரளாவை அச்சுறுத்தி வரும் நிபா வைரஸ் பாதிப்பு குறித்து பேசிய அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ், கடந்த 4 நாட்களில் யாருக்கும் புதிதாக பாதிப்பு ஏற்படவில்லை என்றார்.

இதுவரை 323 மாதிரிகளை பரிசோதனை செய்ததில், 317 பேருக்கு பாதிப்பு இல்லையென முடிவுகள் வந்துள்ளதாகவும், 36 வவ்வால் மாதிரிகளை சோதனை செய்ததிலும் பாதிப்பு இல்லையென்று முடிவுகள் வந்துள்ளதாகவும் தெரிவித்தார். இதனிடையே, நிபா வைரஸ் பாதிப்பால் சிகிச்சை பெற்றுவரும் சிறுவன் உட்பட 4 பேரின் உடல்நிலை முன்னேற்றம் அடைந்துள்ளதாக தெரிவித்த அவர், ட்ரூனாட் சோதனை நடத்த ஐ.சி.எம்.ஆர். அனுமதி அளித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# டெல்லி ரயில் நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளியாக ராகுல்

## வலைதளங்களில் வைரலாகும் வீடியோ

**புது டெல்லி, செப். 22-**

டெல்லி ஆனந்த் விஹார் ரெயில் நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளி உடை அணிந்து, பயணிகளின் உடைமைகளை ராகுல் காந்தி சிறிது தூரம் தூக்கி சென்றார்.

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இந்திய ஒற்றுமை யாத்திரை மேற்கொண்டார். கன்னியாகுமரியில் தொடங்கிய இந்த யாத்திரை கடந்த ஜனவரி மாதம் காஷ்மீரில் நிறைவடைந்தது.



இதனைத் தொடர்ந்து ராகுல் காந்தி சமீப நாட்களாக பொது இடங்களுக்குச் சென்று, டிரைவர், விவசாயிகள், மெக்கானிக்குகள் போன்றோரை சந்தித்து அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை பற்றி கேட்டறிந்து வருகிறார்

இந்த நிலையில், டெல்லியில் உள்ள ஆனந்த் விஹார் ரெயில் நிலையத்திற்கு காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி திடீரென சென்றார். அப்போது ரெயில் நிலையத்தில் பணிபுரியும் (போர்ட்டர்கள்) சுமை தூக்கும் தொழிலாளிகளை ராகுல் காந்தி சந்தித்து பேசினார்.

மேலும் சுமை தூக்கும் தொழிலாளிகளின் குறைகள், குடும்பச் சூழ்நிலை குறித்து ராகுல் கேட்டறிந்தார். அதனை தொடர்ந்து சுமை தூக்கும் தொழிலாளி உடை அணிந்து, பயணிகளின் உடைமைகளை ராகுல் காந்தி சிறிது தூரம் தூக்கி சென்றார். இது தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## முதல்வர் சித்தராமையா தலைமையில்

# மத்திய அமைச்சர் ஷெகாவத்தை சந்தித்த கர்நாடக அமைச்சர்கள் குழு



**புது டெல்லி, செப். 22-**

மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தை கர்நாடக முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் மற்றும் கர்நாடக அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் குழுவினர் நேற்று சந்தித்து பேசினர்.

தமிழகத்திற்கு காவிரியில் உரிய தண்ணீரை திறந்து விட கர்நாடகா தொடர்ந்து மறுத்து வருகிறது. இதனால் தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் பயிர்கள் கருக தொடங்கி உள்ளன. காவிரியில் தமிழகத்துக்கு தர வேண்டிய தண்ணீரை உடனே திறந்து விட தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது.

இது தொடர்பாக காவிரி ஒழுங்காற்று குழு, மேலாண்மை ஆணையம், சுப்ரீம் கோர்ட்டு ஆகியவற்றில் முறையிட்டுள்ளன. இதில் தமிழகத்துக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீரை திறந்துவிட கோரி கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது. ஆனால் தங்களது தேவைக்கே போதுமான தண்ணீர் இல்லாததால் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடும் சூழல் இல்லை என்று கர்நாடகா கூறி வருகிறது.

இதற்கிடையில் டெல்லியில் கர்நாடக முதல்வர் சித்தராமையா, அம்மாநில அனைத்துக்கட்சி எம்.பி.க்களுடன் ஆலோசனை நடத்தினார். இதில் காவிரி விவகாரத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசித்தனர்.

இந்த நிலையில், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தை டெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் கர்நாடக முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் மற்றும் கர்நாடக அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் குழுவினர் நேற்று சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பின் போது காவிரி விவகாரத்தில் தங்கள் தரப்பு கோரிக்கைகள் அடங்கிய மனுவை கர்நாடக அனைத்துக் கட்சி குழு மத்திய அமைச்சரிடம் வழங்கினர். மத்திய அமைச்சர் ஷெகாவத்தை 2 தினங்களுக்கு முன் தமிழக எம்.பி.க்கள் குழு சந்தித்த நிலையில், கர்நாடக குழு நேற்று சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# சென்னை ஓட்டுநர் வங்கி கணக்கில் டெபாசிட் ஆன 9,000 கோடி ரூபாய்

**சென்னை, செப். 22-**

தனது வங்கி கணக்கில் டெபாசிட் ஆன 9 ஆயிரம் கோடி ரூபாயை கண்டு சென்னையில் கார் ஓட்டுனர் ஒருவர் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார். இதையடுத்து வங்கி அதிகாரிகள் அவரை தொடர்பு கொண்டு பணத்தை திரும்ப பெற நடவடிக்கை மேற்கொண்டனர்.

பழனி அருகே உள்ள நெய்க்காரன் பட்டி கிராமத்தை சேர்ந்தவர் ராஜ்குமார். கால்டாக்சி டிரைவர். இவர் தனது நண்பர்களுடன் சென்னை கோடம்பாக்கத்தில் அறை எடுத்து தங்கி இருந்தார். இவர் கடந்த 9-ம் தேதி மதியம் 3 மணியளவில் காரை சாலையோரம் நிறுத்திவிட்டு அதில் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது அவரது வங்கி கணக்கில் ரூ. 9 ஆயிரம் கோடி டெபாசிட் செய்யப்பட்டதாக அவரது செல்போனில் குறுந்தகவல் வந்தது. அதில் நிறைய பூஜ்ஜியங்கள் இருந்ததால் அந்த தொகை எவ்வளவு என்பதை அவரால் கணக்கிட முடியவில்லை.

அவரது வங்கி கணக்கில் ஏற்கனவே ரூ. 105 மட்டுமே இருந்தது. அவர் அந்த குறுந்தகவலை ஆய்வு செய்த போது அது தான் கணக்கு வைத்திருந்த தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் இருந்து வந்ததை உறுதி செய்தார். அதன் பிறகு கணக்கிட்டபோது ரூ. 9 ஆயிரம் கோடி பணம் வந்தது தெரிய வந்தது.

இதனால் அவர் இன்ப அதிர்ச்சி அடைந்தார்.

உடனடியாக அந்த பணத்தில் இருந்து ரூ. 21 ஆயிரத்தை தனது நண்பரின் வங்கி கணக்குக்கு அனுப்பினார். இதற்கிடையே சுமார் 30 நிமிடங்களில் அந்த பணம் வங்கியில் இருந்து திரும்ப பெறப்பட்டது. ஆனால் ரூ. 21 ஆயிரம் பணத்தை வேறு கணக்குக்கு ராஜ்குமார் அனுப்பி இருந்ததை வங்கி அதிகாரிகள் கண்டறிந்தனர்.

இதையடுத்து தூத்துக்குடியை சேர்ந்த வங்கி கிளை அதிகாரிகள் ராஜ்குமாரை தொடர்பு கொண்டு பணத்தை தவறுதலாக உங்களது வங்கி கணக்கில் செலுத்தியாகவும் அதனால் மீண்டும் எடுத்துக் கொண்டதாகவும் கூறி ரூ. 21 ஆயிரம் பணத்தை செலவு செய்ய வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டனர். அதை வங்கியில் ஒப்படைக்குமாறும் கூறினார்கள்.

இதற்கிடையில் வங்கியில் ரூ. 9 ஆயிரம் கோடி வந்ததால் பயந்து போன ராஜ்குமார் வக்கீல் ஒருவருடன் தி.நகரில் உள்ள வங்கி கிளைக்கு சென்றார். அங்கு ராஜ்குமார் தரப்பிலும், வங்கி தரப்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இருதரப்பினரும் சமாதானமாக செல்லலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

தி.நகரில் உள்ள வங்கி கிளையில் எங்களுக்குள் சமரசம் ஏற்பட்டது. நான் எனது நண்பருக்கு அனுப்பிய ரூ. 21 ஆயிரம் பணத்தை திருப்பி தர வேண்டாம் என்று வங்கி அதிகாரிகள் கூறினார்கள். மேலும் வங்கி சார்பில் எனக்கு கார் கடனும் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# ஆதி சங்கராச்சாரியாருக்கு ம.பி.யில் 108 அடி உயர சிலை

## முதல்வர் சவுகான் திறந்து வைத்தார்



**போபால், செப். 22-**

இந்து மதத்தின் தற்போதைய கட்டமைப்பை உருவாக்கிய இந்து மத குருக்களில் முதன்மையானவர்களாக கருதப்படும் பலரில் ஆதி சங்கராச்சாரியார் ஒருவர். மத்திய பிரதேச மாநிலத்தில் காந்த்வா மாவட்டத்தில் காந்த்வா நகருக்கு அருகே மந்தாதா பகுதியில் உள்ளது ஓம்காரேஷ்வர் கோவில். இது ஒரு புகழ் பெற்ற இந்து மத சைவ கோவிலாகும். இக்கோவில் நர்மதை நதிக்கரை ஓரம் உள்ளது.

ஆதி சங்கராச்சாரியார் ஓம்காரேஷ்வர் நகரில்தான் ஆரம்ப வேதகல்வியை பயின்றார். இப்பகுதியில் ஆதி சங்கராச்சாரியாருக்கு 108 அடியில் மிக பெரிய சிலை ஒன்று நிறுவப்பட்டு ம.பி. மாநில முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகானால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அப்போது உரையாற்றிய முதல்வர் சவுகான் கூறுகையில்,

கலாச்சார ரீதியாக ஆதி குரு சங்கராச்சர்ய மகராஜ் நாட்டை ஒருங்கிணைத்தார். வேதங்களின் சாரம் சாமானிய மக்களுக்கும் புரியும் வகையில் பரவ தீவிரமாக செயல்பட்டார். நமது நாட்டின் 4 மூலைகளிலும் 4 மடங்களை நிறுவினார். அவரது உயரிய, சிறந்த முயற்சியினால்தான் நாடு இத்தனை ஆண்டுக்காலம் ஒன்றாக, ஒற்றுமையாக உள்ளது என்று அவர் தெரிவித்தார். இப்பகுதிக்கு செல்ல விரும்பும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் ம.பி.யின் இந்தோர் நகரிலிருந்து 80 கிலோமீட்டர் பயணம் செய்து இந்த இடத்தை அடையலாம்.

# பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதாவுக்கு ஜி.கே.வாசன் ஆதரவு

**சென்னை, செப். 22-**

பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு த.மா.கா. என்றும் துணை நிற்கும் என்று ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

பாராளுமன்றத்தில் வரலாற்று சிறப்பு மிக்க அறிவிப்பாக மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது மகளிருக்கான இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டதால், வருங்காலங்களில், பாராளுமன்றத்திலும், சட்ட மன்றத்திலும் மகளிர்க்கான பங்களிப்பு அதிகரிக்கும்.

எதிர்கட்சிகள் இந்த இட ஒதுக்கீட்டை அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் மகளிருக்கு அளிக்கும் உரிமையை, அங்கீகாரத்தை, பகிர்ந்தளிக்கும் நிகழ்வாக பார்க்க வேண்டும், தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும். பெண்களுக்கான 33 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கும் மசோதாவிற்கு த.மா.கா. என்றும் துணை நிற்கும். புதிய பாராளுமன்ற கட்டிடத்தில், புதிய தொடக்கமாக வரலாற்று சிறப்புமிக்க மசோதாவை கொண்டு வந்த பிரதமர் மோடிக்குக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும், மனம் நிறைந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## சென்னையில் கலைஞர் நூற்றாண்டு விழா:

# சோனியா, மம்தாவுக்கு கனிமொழி அழைப்பு

**சென்னை, செப். 22-**

சென்னை நந்தனத்தில் அக்டோபர் 14-ம் தேதி நடைபெறும் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வருமாறு காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மற்றும் பிருந்தா காரத் உள்ளிட்டோருக்கு கனிமொழி எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

மறைந்த தி.மு.க. தலைவரும், முன்னாள் முதல்வருமான கருணாநிதியின் நூற்றாண்டு விழா தமிழக அரசு சார்பிலும், கட்சியின் சார்பிலும் ஆண்டு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி தி.மு.க.வின் பல்வேறு அணிகள் மற்றும் அமைப்புகள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.



தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., மகளிர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை பிரம் மாண்டமாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளார். இதையொட்டி அக்டோபர் 14-ம் தேதி பிரம்மாண்டமான மகளிர் மாநாடு மற்றும் கருத்தரங்கத்துக்கு அவர் ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த மாநாடு நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் 14-ம் தேதி மாலையில் நடைபெறுகிறது. இந்த மகளிர் மாநாட்டில் பங்கேற்க அகில இந்திய அளவில் பெண்களுக்காக பாடுபடுபவர்கள், பெண் தலைவர்கள் ஆகியோரை அழைத்து வர முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தியை கனிமொழி எம்.பி. நேரில் சந்தித்து அழைத்துள்ளார். அவர் கலந்து கொள்வதாக உறுதி அளித்துள்ளார். மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. அவரும் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்த பிருந்தா காரத் எம்.பி. உள்ளிட்ட பிரபலங்களை கனிமொழி எம்.பி. நேரில் சென்று சந்தித்து அழைத்து வருகிறார். இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

இது தொடர்பாக இரண்டு மாவட்ட செயலாளர்கள் தலைமையில் ஆலோசனை கூட்டம் நாளை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் கனிமொழி எம்.பி. பங்கேற்று நிகழ்ச்சிகள் பற்றி விளக்கமளிக்க உள்ளார்.


மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## 2024-ல் குடியரசு தின விழாவில்

# சிறப்பு விருந்தினராக பங்கேற்க ஜோபைடனுக்கு அழைப்பு

**புது டெல்லி, செப். 22-**

2024-ல் குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க அதிபர் ஜோபைடனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



2024-ம் ஆண்டில் நாட்டின் 75-வது குடியரசு தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. டெல்லியில் உள்ள ராஜ பாதையில் மத்திய அரசு சார்பில் ஆண்டு தோறும் குடியரசு தின விழா கொண்டாடப்படும்.


கடந்த முறை சென்டிரல் விஸ்டா திட்டத்தில் புனரமைக்கப்பட்ட கடமைப் பாதையில் (முன்பு ராஜ பாதை) குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. இந்த குடியரசு தின விழாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு தேசிய கொடியை ஏற்றினார். ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழா கொண்டாட்டத்தின் போது வெளிநாட்டு தலைவரை வரவழைப்பது வழக்கம். அதன்படி கடந்த குடியரசு தின விழாவில் எகிப்து அதிபர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

இந்நிலையில், வரும் 2024-ம் ஆண்டின் 75-வது குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள அதிபர் ஜோ பைடனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# திருப்பதியில் இன்று கருட சேவை: பக்தர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பு

**திருப்பதி, செப். 22-**

பிரம்மோற்சவ விழாவின் 4-வது நாளான நேற்று கல்ப விருட்ச வாகன சேவை நடந்த நிலையில் இன்று கருட சேவை நிகழ்ச்சி நடைபெறுகிறது.



திருப்பதி ஏழுமலையான் கோவில் பிரம்மோற்சவ விழாவில் 3-வது நாளான நேற்று முன்தினம் இரவு ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் ஏழுமலையான் முத்து பந்தல் வாகனத்தில் 4 மாட வீதியில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

4-வது நாளான நேற்று காலை 8 மணி முதல் 10 மணி வரை கல்ப விருட்ச வாகன சேவை நடைபெற்றது. மாட வீதியில் காத்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் மழையும் பொருட்படுத்தாமல் காத்திருந்து தரிசனம் செய்தனர். அதை தொடர்ந்து திருவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிக்கொடுத்த சுடர் மாலை மேளதாளம் முழங்க பெரிய ஜீயர் மண்டபத்திற்கு கொண்டு வரப்பட்டு பின்னர் ஆண்டாள் மாலை தேவஸ்தான அதிகாரிகளிடம் வழங்கப்பட்டது. இதையடுத்து இரவு சர்வ பூபால வாகனம் சேவை நடைபெற்றது.

பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்வான கருட சேவை இன்று நடக்கிறது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பக்தர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் சுகாதார ஏற்பாடுகளை தேவஸ்தான அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

மேலும் கூடுதல் போலீசார் நியமிக்கப்பட்டு பக்தர்களுக்கு கட்டுப்பாடுகள் விதித்து உள்ளனர். நேற்று மாலை முதல் இன்று இரவு வரை மலை பாதையில் பைக்குகள் செல்ல அதிகாரிகள் தடை விதித்து உள்ளனர்.



திருமங்கலம் அருகே முத்தப்பன்பட்டியில் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி முத்தையாவின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் தி.மு.க இளைஞரணி செயலாளர்,அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று அங்குள்ள நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.உடன் அமைச்சர்கள் பி.மூர்த்தி,பெரியகருப்பன்,ரகுபதி,மதுரை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன்,எம்.எல்.ஏ.க்கள் தளபதி,காதர்பாட்சா(எ) முத்துராமலிங்கம்,தமிழரசி, வெங்கடேசன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## சேடபட்டி இரா.முத்தையா முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க முன்னோடிகள் 1500 பேருக்கு பொற்கிழி வழங்கினார்

**திருமங்கலம்.செப்.22.**

திருமங்கலம் அருகேயுள்ள முத்தப்பன்பட்டியில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியதுடன் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க மூத்த முன்னோடிகள் 1500 பேருக்கு ரூ.10ஆயிரம் அடங்கிய பொற்கிழி வழங்கி எழுச்சி உரையாற்றினார்.

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் திருமங்கலம் அருகே முத்தப்பன்பட்டியில் உள்ள சேடபட்டியார் திடலில் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி மற்றும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க மூத்த முன்னோடிகள் 1500 பேருக்கு தலா ரூ.10ஆயிரம் பொற்கிழி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்ற பிரமாண்டமான விழாவில் தி.மு.க இளைஞரணி செயலாளரும், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்த முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இதனை தொடர்ந்து மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க மூத்த முன்னோடிகள் 1500பேருக்கு பொற்கிழி வழங்கி எழுச்சி உரையாற்றினார்.

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில்: அமைச்சராக பொறுப்பேற்று முதல்முறையாக மதுரை தெற்கு மாவட்ட கழக நிகழ்வினில் பங்கு கொள்கிறேன். மதுரைக்கு வருவது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. விழாவில் நினைவு பரிசாக கடிகாரம் வழங்கிய மாவட்டச் செயலாளர் மணிமாறன் இது பாஜக அரசை வீட்டிற்கு அனுப்புகிற கவுண்ட் டவுன் கடிகாரம் என்று தெரிவித்தார். அது நிச்சயம் நடந்திடும். 2007-ம் ஆண்டு நெல்லையில் தி.மு.க இளைஞரணி முதலாம் மாநாடு நடந்தது. தற்போது வரும் டிசம்பர் 17-ம் தேதி சேலத்தில் தி.மு.க இளைஞரணி மாநாடு எழுச்சியுடன் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டிற்கு கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி ஆசி பெற்றிட இங்கு வந்துள்ளேன். கட்சியினருக்கு உதவிகள் செய்வதில் இந்தியாவின் முன்னோடி இயக்கமாக தி.மு.க திகழ்கிறது. நீட் தேர்வு ரத்து செய்யப்படும் வரையில் தி.மு.க தொடர்ந்து பேராடிக் கொண்டு இருக்கும். நீட் தேர்வினை ரத்து செய்திட வலியுறுத்தி கோடிக்கணக்கான பேரிடம் கையெழுத்து பெற்றிடும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை விரைவில் நடத்த உள்ளோம். ஒன்றிய பாஜக அரசு தமிழகத்திற்கு தேவையற்ற அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறது. பாஜக.வின் 9ஆண்டு கால ஆட்சியில் 7.5லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக சிஏஜி அறிக்கை தெரிவித்துள்ளது. கடந்த கொரோனா காலத்தில் பெறப்பட்ட 32ஆயிரம் கோடி பிஎம் கேர்ஸ் நிதி என்ன ஆனது என்று தெரியவில்லை. முதலமைச்சர் சொன்னபடி மகளிருக்கு மாதம் ஆயிரம் வழங்கும் திட்டத்தை தொடங்கி விட்டார். ஆனால் பிரதமர் மோடி சொன்னது போல் 15லட்சம் வழங் கி ட வில்லை. இந் தியாவை மாற்றிக் காட்டுவேன் என்று சொன்ன மோடி நாட்டின் பெயரை பாரத் என்று மாற்றிட போகிறார். அண்ணா தி.மு.க தற்போது அமித்ஷா தி.மு.க என்று மாறி பாஜக.வின் ஒரு அணியாகிவிட்டது. 2021 சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றது போல் வரும் நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெறுவது உறுதி.

இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக முத்தப்பன்பட்டிக்கு வருகை தந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு டி.குன்னத்தூரில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் மேளதாளங்கள் முழங்கிட உற்சாக வரவேற்பு அளிக் கப் பட் டது. மே லும் சேலம் திமுக இளைஞரணி மாநாட்டு நிதியாக ரூ.50லட்சத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார். மேலும் 30கிலோ மீட்டர் தூரத்திற்கு தி.மு.க கொடிகள் ஊன்றப்பட்டு, பேனர்கள், கட்அவுட்கள் மற்றும் வாழை, கரும்பு, கொடி தோரண அங்காரங்களுடன் எழுச்சிமிகு வரவேற்பளிக்கப்பட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கானோருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.மூர்த்தி, பெரியகருப்பன், ரகுபதி, எம்.எல்.ஏ.க்கள் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி, காதர்பாட்சா(எ) முத்துராமலிங்கம், தமிழரசி, வெங்கடேசன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் முத்துராமலிங்கம், லதாஅதியமான், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜன், துணை செயலாளர் பாலாஜி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் பாண்டியன், மகிழன், முத் து ரா மன், கள் ளிக் குடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பா.மதன்குமார், ஒன்றிய செயலாளர்கள் தனபாண்டியன், பாண்டியன், ஆ லம் பட்டி சண்முகம், ராமமூர்த்தி, தங்கப்பாண்டியன், தனசேகரன், திருமங்கலம் நகரச் செயலாளர் ஸ்ரீதர், மண்டல ஐடி விங் பொறப்பாளர் பாசபிரபு, மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், கிருத்திகாதங்கப்பாண்டி, பரமசிவம், செல்வம், செல்வேந்திரன், பாண்டி முருகன், வில்லூர் ஞானசேகரன், ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர் சிவமுருகன், திருமங்கலம் நகர் மன்ற தலைவர் ரம்யாமுத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் மற்றும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.வைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை, வார்டு கழக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## மகளிர் உரிமை தொகை கிடைக்காதவர்களுக்கு தாலுகா அலுவலகத்தில் விவரங்கள் வழங்கல்

**விருதுநகர்.செப்.22.**

தமிழக அரசின் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தில் விண்ணப்பித்தும் கிடைக்காதவர்களுக்கு அந்தந்த தாலுகா அலுவலகங்களில் தனி கவுண்டர்கள் அமைத்து விபரங்கள் வழங்கப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் மகளிர் உரிமைத் தொகை பெற முடியாதவர்கள் அதற்கான விவரங்களை தாலுகா அலுவலகங்களை கேட்டு பயன்பெறும் வகையில் அனைத்து தாலுகா அலுவலகங்களிலும் கவுண்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஸ்மார்ட்ரேஷன் கார்டு, ஆதார் கார்டு கொண்டு வந்து அதிகாரியிடம் கொடுக்கலாம். அரசின் மின் செயலியில் ஆய்வு செய்து விண்ணப்பதாரரின் பெயர், விண்ணப்ப எண், குடும்ப உறுப்பினர் விவரம் ,வகை ப்பாடு, காரணம் ,ரேஷன் கடை குறியீடு, முகவரி உண்மைத் தன்மை என எல்லாவற்றையும் ஆராய்ந்து விண்ணப்பத்தின் நிலையை மக்களிடம் கூறுகின்றனர் .இதில் தினமும் 200க்கும் மேற்பட்டோருக்கு தாலுகா அலுவலகங்களில் தகவல் தெரிவிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பெரியகுளத்தில் தனியார் மதுபான கடைகளை அகற்ற வலியுறுத்தி மார்க்.கம்யூ. கட்சி காத்திருப்பு போராட்டம்

**தேனி.செப்.22.**

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் முன்றாந்தல் காந்தி சிலை அருகில் மெயின் ரோட்டில் ஒரு மதுபானக்கடையும், காந்தி சிலை உள்ள வளாகத்திலேயே ஒரு மதுபானக்கடை மற்றும் மருத்துவமனை அருகில் ஒரு தனியார் மதுபானக் கடை உள்ளது. இம்மதுபான கடையில் மது அருந்துபவர்களால் சாலையில் போக்குவரத்து நெரிசல், நோயாளிகள், பொதுமக்கள், மாணவ, மாணவிகளுக்கு பெரும் இடையூறாக உள்ளது. எனவே இம்மூன்று மதுபான கடைகளையும் அகற்றக்கோரி பல்வேறு தரப்பினரும் கோரிக்கை வைத்துள்ளனர். இந்நிலையில் இம்மூன்று மதுபானக்கடைகளையும் அகற்ற தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நேற்று காத்திருப்பு போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்திற்கு தென்கரை கிளை செயலாளர் சுப்பிரமணி, மாதர் கிளை செயலாளர் சாந்தி ஆகியோர் தலைமை தாங்கினர். கிளை செயலாளர்கள் சங்கர், மணிகண்டன், மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் எம்.எல்.ஏ லாசர், மாவட்ட செயற்குழு இராமச்சந்திரன், முருகன், வெண்மணி உள்ளிட்டோர் மதுபானகடைகளை அகற்ற வலியுறுத்தி சிறப்புரையாற்றினர். நகர்மன்ற உறுப்பினர் மதன்குமார் நன்றி கூறினார்.

## திருமலைக்கேணியில் சஷ்டி பூஜை

**நத்தம், செப், 22**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோவிலில் புரட்டாசி மாத சஷ்டி பூஜை நடந்தது. இதில் முருக பெருமானுக்கு பால், பழம், பன்னீர், விபூதி, சந்தனம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், சிறப்பு அலங்காரம், பூஜைகள், தீபாராதனைகள் நடந்தது. மேலும் அருகிலுள்ள காமாட்சி மவுன குருசாமி மடத்திலும் சிறப்பு பூஜைகள் நடந்தது. இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இதைபோலவே நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும் சஷ்டியையொட்டி பூஜைகள் நடந்தது.

## வந்தே பாரத் ரயில் விருதுநகரில் நின்று செல்லும்

**விருதுநகர் செப். 22.**

திருநெல்வேலி -சென்னை இடையிலான வந்தே பாரத் அதிவிரைவு ரயில் சேவை விருதுநகர் சந்திப்பிலும் நின்று செல்லும் வகையில் பயணத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 24 இல் காணொளி மூலம் திருநெல்வேலி இருந்து சென்னைக்கு இடையே வந்தே பாரத் ரயில் சேவை இயக்கப்பட உள்ளது. தமிழகத்தில் முக்கிய வணிக நகரமான விருதுநகர் சந்திப்பில் நிறுத்தம் இல்லாமல் பயணத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது .அதனைத் தொடர்ந்து விருதுநகர் பாஜக மாவட்ட தலைவர் பாண்டுரங்கன் விருதுநகர் ரயில் நிலைய சந்திப்பு நிறுத்தத்திலும் நிற்க வேண்டும் என மாநில பாஜக தலைவர் அண்ணாமலை இடம் கோரிக்கை விடுத்தார். இதை எடுத்து மாநிலத்தில் அண்ணாமலை ரயில்வே அமைச்சர் மூலம் ரயில்வே துறையில் முறையிட்டார். இதை அடுத்து தற்போது விருதுநகர், மதுரை திண்டுக்கல் திருச்சி விழுப்புரம் சந்திப்பு ரயில் நிலையங்களில் நின்று செல்லும் வகையில் பயணத்திட்ட மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இத்தகவலை மாவட்ட பாஜக தலைவர் பாண்டுரங்கன் தெரிவித்தார்.

## நத்தத்தில் கஞ்சா விற்றவர் கைது

**நத்தம்- செப், 22**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பஸ்நிலைய பகுதியில் கஞ்சா விற்பனை நடப்பதாக நத்தம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது..அதன் பேரில் பஸ்நிலைய பகுதியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி உள்ளிட்ட போலீசார்கள் ரோந்து சென்றனர். அப்போது பஸ் நிலையத்தில் கஞ்சா விற்பனை செய்து கொண்டிருந்த அண்ணாநகரை சேர்ந்த முகமது ரபீக் (30) என்பவரை போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து 250 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

## அய்யம்பாளையம் பேரூராட்சியில் டெங்கு ஒழிப்பு தீவிர துப்புரவு மற்றும் சுகாதாரப் பணிகள் சிறப்பு முகாம்

**வத்தலகுண்டு செப்.22**



திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையம் பேரூராட்சி பகுதியில் திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் பூங்கொடி திண்டுக்கல் மண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மனோரஞ்சிதம் ஆகியோர் உத்தரவின் பெயரில். பேரூராட்சி தலைவர் ரேகா ஐயப்பன், துணைத் தலைவர் ஜீவானந்தம். பேரூராட்சி செயல் அலுவலர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் அய்யம்பாளையம் பேரூராட்சி பகுதியில் உள்ள 15 வார்டுகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்துகள் அடிக்கப்பட்டு வருகிறது கழிவு நீர் வாய்க்கால் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டு மருந்துகள் அடிக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் பள்ளி வளாகங்கள் உள்பட்டுள்ள பகுதிகளில் கொசு ஒழிப்பு புகை மருந்துகள் அடிக்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் பயந்தப்படுத்தப்படும் குப்பை கழிவுகளை பொது இடங்களில் கொட்டக்கூடாது பேரூராட்சி பணியாளர்கள் வரும்போது மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து கொடுக்க வேண்டும், தங்களுடைய சுற்றுப்புற பகுதிகளை சுகாதார முறையில். தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். தங்கள் பகுதிகளில் யாருக்கேனும் காய்ச்சல் வந்தால் உடனடியாக பேரூராட்சி அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று பேரூராட்சி சார்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி கவுன்சிலர்கள் லதா சித்ரா தங்கராஜ் சௌந்தர் சாதிக் அழகேசன் பழனியம்மாள் பேச்சியம்மாள் கவுன்சிலர்கள், பேரூராட்சி இளநிலை உதவியாளர் ராஜசேகர். பேரூராட்சி தூய்மை காவலர்கள், கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஆகியோருடன் முழு சுகாதார பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்று பேரூராட்சி செயல் அலுவலர் கூறினார்.



மதுரை மாநகர் மாவட்ட தே.மு.தி.கவை சேர்ந்த வழக்கறிஞர் விவேக் விஷ்வா முருகேசன் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி வி.பி.ஆர். செல்வகுமார் ஏற்பாட்டில் மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ. முன்னிலையில் அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.இதில் மாவட்ட பகுதி வட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம், தேனி அல்லி நகரம் நகராட்சிக்குட்பட்ட கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி பண்டிகை சிறப்பு தள்ளுபடி விற்பனையினை கலெக்டர் ஷஜிவனா குத்துவிளக்கேற்றி வைத்து துவக்கி வைத்தார்.

## விருப்பாச்சி தொழிற்பயிற்சி மையத்தில் விலையில்லா மிதிவண்டி வழங்கல்



**ஒட்டன்சத்திரம்.செப்.22.**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்துக்குட்பட்ட விருப்பாச்சி வாய்க்கால் பாலத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி மையத்தில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கள் துறை அமைச்சர்அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில்மாணவ-மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் .தர்மராஜன் , ஊராட்சி ஒன்றியபெருந் தலைவர் அய்யம்மாள், துணைத் பெருந்தலைவர் காயத்ரிதேவி , ஒன்றிய துணைச் செயலாளர் முருகானந்தம் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சங்கீதா ,

ஒன்றியக்குழு உறுப்பினர் சின்னத்தாயி, ஊராட்சி மன்ற தலைவர்கள்மாலதி வெண்ணிலா, முருகானந்தம், சாரதாசிவராஜ், வேலுச்சாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, தொழில் பயிற்சி மைய முதல்வர் கண்ணன், ஊராட்சி செயலர் பிச்சைமணி உள்ளிட்ட மாணவ-மாணவியர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## காட்டுப் பகுதியில் மழை நீர் ஓடை ஆக்கிரமிப்புகளை அகற்றி சீரமைக்க விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்



**அருப்புக்கோட்டை செப். 22.**

அருப்புக்கோட்டையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் அருப்புக்கோட்டை பொறுப்பு ஆர்.டி.ஓ. சிவக்குமார் தலைமையில் அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் காரியாபட்டி தாசில்தார் பொதுப்பணித்துறை விவசாயத்துறை வனத்துறை கூட்டுறவுத்துறை உள்ளாட்சித் துறை மின்சார வாரியம் போன்ற விவசாயம் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் காவிரி வைகை குண்டாறு வைப்பார் பாசன விவசாயிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் ரா ராம்பாண்டியன் கூறியதாவது. தற்போது மழை காலம் தொடங்கி உள்ளது. எனவே அருப்புக்கோட்டை டு கல்குறிச்சி நான்கு வழிச்சாலை கிழக்கு மேற்கு இருபகுதிகளிலும் உள்ளகாட்டுப் பகுதியில் தொடங்கி அருப்புக்கோட்டை பந்தல்குடி நான்கு வழிச்சாலையில் உள்ள கிழக்கு மேற்கு பகுதிகளில் உள்ள காட்டுப் பகுதிகளில் மழை நீர் ஓடை வழியாக முப்பதுக்கு மேற்பட்ட கண்மாய்களுக்கு மழை நீர் சென்றடைகிறது. தற்போது சோலார் மற்றும் அதிக நிலம் வாங்குபவர்கள் இந் நிலப்பகுதி நீர்வழிப்பாதையை ஆக்கிரமித்து அடைத்து விடுகின்றனர்.

இதனால் கண்மாய்களுக்கு நீர்வரத்து இல்லாமல் போகிறது. இப்பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் இந்த ஓடைகளை சரி பார்த்து சரி செய்ய வேண்டும் என பேசினார். மேலும் அரசு இதற்கு போதிய நிதி ஒதுக்கி ஓடைகளை மராமத்து பணியை உடனடியாக செய்ய வேண்டும் என கூறினார். மேலும் தெற்காறு வழியாக தோப்பூர் கண்மாய்க்கு தண்ணீர் செல்ல தெற்காறு குறுக்கே தடுப்பணை பணியினை துவக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து பேசினார். நரிக்குடியில் உள்ள அரசு நாற்றங்கால் கன்றுகளை கையிருப்பை பத்திரிக்கை மூலம் விவசாயிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும் என கூறினார் .மேலும் வரக்கூடிய காலத்தில் தொலைக்காட்சி பத்திரிக்கை நண்பர்களுக்கு தகவல் கொடுத்து இக்கூட்டத்தை விவசாயிகளுக்கு பயனுள்ளதாக நடத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். முடுக்கங்குளம் சிவசாமி சிறு நீர் வழிப்பாதைமட்டும் உள்ள சிறிய கண்மாய்களுக்கு நீர்வழி பாதையை சுத்தம் செய்ய வேண்டும் என பேசினார் .இதுபோல் பல விவசாய சங்கங்கள், விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர்.

### செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில்

# தி.மலை அருணை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பாரதியும் திரை இசை பரதமும் நிகழ்ச்சி

## அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்தார்



**தி.மலை செப் 22**

திருவண்ணாமலை மாவட்டம் தென்மாத்தூர் அருணை மருத்துவ கல்லூரி மருத்துவமனை கூட்ட அரங்கில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் பாரதியும் திரை இசை பரதமும் நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்து பேசியதாவது.

திருவண்ணாமலை மாவட்டத்தை தேர்வு செய்து பாரதியும் திரை இசை பரதமும் என்கிற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்தி வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறைக்கும் தமிழ்நாடு திரைப்பட பிரிவுக்கும் எனது பாராட்டுகளையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ்நாடு அரசு சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் 110-ன் விதியின் கீழ் பாரதியின் படைப்புகள் அனைத்தும் குறும்படம் மற்றும் நாடக வடிவில் நடத்த வேண்டும் என்றும் ஊடக வாயிலாக மக்களை சென்றடைய வேண்டும் என்றும் சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். பாரதியார் ஒரு தீர்க்கதரிசியாகும் பின்னால் நடக்கப் போவதை முன்பே கணிக்கும் திறமை கொண்டவர் இவர் வாழ்ந்த காலத்தில் திரை இசை என்று ஒன்றும் இல்லை ஆனால் அவருடைய படைப்புகள் தற்போது அனைத்து வடிவ இசைகளுக்கும் பொருத்தமாக உள்ளது. பாரதியார் அவர்களின் பாடல்களை முதன் முதலாக புகழ்பெற்ற நாடக கலைஞரான கட்டப்பாவை தான் நாடகங்களில் பயன்படுத்தினார்கள். அதன் பிறகு ஏ.வி.எம்.மெய்யப்ப செட்டியார் 1931-ம் ஆண்டு பாரதியார் அவர்களின் பாடல்களை திரையில் பயன்படுத்த காப்பீட்டு உரிமையை பெற்று இருந்தார். மேலும் பாரதியார் சுதந்திரம் பெறுவதற்கு முன்பே சுதந்திரம் கண்டிப்பாக கிடைக்கும் என்று கணித்து “ஆடுவோமே பள்ளி பாடுவோமே” என்ற பாடல்களை எழுதினார். டி.கே.பட்டம்மாள் தான் வானொலியில் இருந்த பாடலை முதன் முதலில் பாடினார். அதன் பிறகு திரையுலகில் நாம் இருவர் என்ற படத்தில்தான் அவருடைய பாடல் பயன்படுத்தப் பட்டது.

பாரதியார் இயற்றிய பாடல்கள் இப்பொழுது பல்வேறு திரைப்படங்களில் பாடல்களாக வந்திருக்கிறது. கடந்த காலங்களில் இருந்து இப்பொழுது உள்ள இளம் தலைமுறை வரை இசை அமைப்பாளர்கள் பாரதியார் அவர்களின் பாடல்களை இசை அமைத்திருக்கிறார்கள்.

பாரதியார் அவர்களை மக்கள் வரகவி மகாகவி தேசிய கவி என்று பல்வேறு பட்டப் பெயர்களில் அவரை அழைக்கின்றார்கள். பாரதியார் பழமையும் புதுமையும் கலந்து மக்களுக்கு பிடித்ததை பாடக்கூடியவர் என்பதால் பேரறிஞர் அண்ணா பாரதியார் அவர்களை மக்கள் கவிஞர் என்று பாராட்டி அழைத்தார். 1973-ம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான ஆட்சி காலத்தில் தான் அவருடைய பாடல்களை தேசிய உடைமையாக்க வேண்டும் என்றும் எட்டயபுரத்தில் உள்ள அவருடைய வீட்டை நினைவகங்களாக மாற்றினர். கவிஞர்களை பாராட்டும்விதமாக 1992-ம் ஆண்டு முதல் அவருடைய பெயரில் ஒரு இலட்சம் ரொக்க பணமும் எட்டு கிராம் தங்கமும் தமிழ்நாடு அரசின் சார்பில் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் பாரதியார் இயற்றிய பாடல்களும் அவருடைய புகழ் நீண்ட காலத்துக்கு தமிழ்நாட்டில் நிலைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் சட்டப்பேரவை 110-ன் விதியின் கீழ் பாரதியார் இயற்கை எய்திய நாளான செப்டம்பர் 11-ம் தேதி தேசிய மகாகவி நாளாக கடைபிடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். மேலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் என இருபாலரும் அவருடைய பாடல்களை அறிந்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகிறது. உலக தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து பார் எங்கும் பாரதி என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. நாட்டிய பள்ளி கலைஞர்கள் அரங்கேற்றிய பாரதியும் திரை இசை பரதமும் என்கின்ற நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்து தற்போது அரங்கேற்றி இருக்கிறார்கள் அவர்களுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன் என பொதுப்பணித் துறை அமைச்சர் இந்நிகழ்ச்சியில் பேசினார்.

இதனை தொடர்ந்து இந்நிகழ்ச்சியில் சிறப்பாக கலை நிகழ்ச்சிகள் மற்றும் நடனம் ஆடிய கலைஞர்கள் மற்றும் தெருக்கூத்து கலைஞர்களை பாராட்டி பரிசாக புத்தகத்தை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி) பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்) ஒ.ஜோதி (செய்யார்) மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன் தமிழ்நாடு திரைப்பட பிரிவு தலைமை தயாரிப்பாளர் (மு.கூ.பொ)ச.ரவி பிரேமாலயா நாட்டியஞ்சலி லதா அரவிந்தன். தமிழ்நாடு அரசு உடல் உழைப்பு தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு வாரியம் இரா.ஸ்ரீதரன் மாணவ மாணவிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# மகளிரணி, தொண்டரணி பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்: அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை

**திருவண்ணாமலை, செப்.22-**

தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும் தி.மு.க. உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினரும் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளருமான எ.வ.வேலு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



தமிழ்நாடு முதல்-அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் ஆலோசனைப்படி திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் தி.மு.க. மகளிர் அணி, தொண்டர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு நிர்வாகிகள் நியமிக்கப்பட உள்ளனர்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் திருவண்ணாமலை சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்திலும், திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தை சேர்ந்தவர்கள், வந்தவாசியில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், விண்ணப்பங்களை பெற்று, அதனை உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்து, அந்ததந்த மாவட்ட அலுவலகங்களில் வருகிற 30ஆம் தேதி சனிக்கிழமை மாலைக்குள் ஒப்படைத்திட வேண்டும்.

இதன்படிநகர, ஒன்றியம், பேரூர் அமைப்பிற்கு ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

பேரூர் அமைப்பிற்கு ஒரு அமைப்பாளர், 3 துணை அமைப்பாளர்கள் நியமிக்கப் படுவர்.

இப் பொறுப் புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள், மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வரவிரும்பினால், அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம். முழுமையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட அலுவலகத்தில் வருகிற 30-ந் தேதி (சனிக்கிழமை) மாலை 6 மணிக்குள் ஒப்படைக்கவேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கலைஞரின் நூற்றாண்டு விழா

# ஆம்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மரக்கன்று நடும் விழா



**திருப்பத்தூர், செப் 22-**

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஒட்டி மரக்கன்று நடு விழா நடைபெற்றது விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் தலைமை தாங்கினார் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன் நகர மன்ற தலைவர் ஏஜாஸ் அகமது மாதனூர் ஒன்றிய பெருந்தலைவர் சுரேஷ்குமார் மாவட்ட பதிவாளர் பிரகாஷ் ஆகியோர் சிறப்பாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சார் பதிவாளர் வளாகத்தில் பல்வேறு மரக்கன்றுகளை வைத்து பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்ச்சியில் ஆம்பூர் சார் பதிவாளர்.ரமேஷ் குமார்,நகர மன்ற துணை தலைவர் ஆறுமுகம்,மற்றும் அலுவலக பணியாளர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் கலைஞர் நகரில்

# கழிவுநீர் வீடுகளில் புகுந்ததால் மக்கள் சாலை மறியல்



**திருப்பத்தூர், செப். 22-**

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 35 வது வார்டு கலைஞர் நகரில் சுமார் 1000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதிகளில் குடிநீர் கழிவுநீர் என எந்த அடிப்படை வசதிகளை நகராட்சி நிர்வாகம் செய்யப்பப்படவில்லை என கூறப்படுகிறது. கடந்த 3 நாட்களாக திருப்பத்தூர் பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. கழிவு நீர் கால்வாய் வசதி இல்லாததால் கலைஞர் நகர் பகுதியில் உள்ள வீடுகளில் கழிவுநீருடன் மலை நீர் சேர்ந்து வீடுகளில் புகுந்தது. அதனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆனார்கள். இந்த பகுதி மக்கள் நகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் நடவடிக்கை எடுக்காததால் இன்று சேலத்தில் இருந்து திருப்பத்தூர் வரும் பிரதான சாலையில் மறியலில் ஈடுபட்டனர். விரைந்து வந்த நகர காவல்துறையினர் சமரச பேச்சு வார்த்தையை தொடர்ந்து அனைவரும் கலைந்து சென்றனர். இதனால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# செங்கம் விநாயகர் சிலை கரைப்பு ஏரியில் மூழ்கி வாலிபர் பலி



**செங்கம்,செப் 22**

செங்கம் அடுத்த பக்கிரிப்பாளையம் பகுதியில் வைக்கப்பட்ட விநாயகர் சிலை மூன்றாம் நாள் மாலை மேல் புழுதியூர் ஏரியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தண்ணீரில் கரைக்கப்பட்டது. அப்போது விநாயகர் சிலையுடன் ஏரியில் இறங்கிய பக்கிரிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சதீஷ் என்கிற ராஜ்குமார்(வயது 17) என்ற வாலிபர் தண்ணீரில் மூழ்கி சேற்றில் சிக்கி பலியானார். தகவல் அறிந்த தீயணைப்பு துறையினர் சென்று சுமார் 2மணி நேரம் போராடி சடலத்தை மீட்டனர். செங்கம் போலீசார் இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். இறந்த சதீஷ் என்கிற ராஜ்குமார் உடல் பிரேத பரிசோதனைக்காக செங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

# செங்கத்தில் விநாயகர் சதுர்த்தி நிறைவு நாள் ஊர்வலம்



**செங்கம்,செப் 22**

செங்கத்தில் விநாயகர் சதுர்த்தி நிறைவு ஊர்வலம் நடைபெற்றது. செங்கத்தில் விநாயகர் சதுர்த்தி அன்று 24சிலைகள் ஊர்வலம் நடைபெற்றது. போளூர் ரோடிலிருந்து மேளதாளம் வான வேடிக்கையுடன் ராஜ வீதி பெருமாள் கோயில் தெரு சிவன் கோயில் தெரு கடைவீதி போன்ற முக்கிய தெருக்களின் வழியாக சென்ற ஊர்வலத்தின் முடிவில் சிலைகள் விழா ஏற்பாட்டாளர்கள் செங்கம் நகரின் பல இடங்களில் வைத்து வழிபாடுகள் நடத்தினர். ஊர்வலத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் தலைமையில் போலீசார் செய்திருந்தனர். மூன்றாவது நாள் மீண்டும் விநாயகர் சிலைகள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு ஏரிகளில் கரைக்கப்பட்டது. செங்கம் டிஎஸ்பி தேன்மொழிவேல் தலைமையில் போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். நிகழ்ச்சிகளில் இந்து முன்னணி நிர்வாகிகள் பொதுமக்கள் பக்தர்கள் விழா குழுவினர் இளைஞர் அமைப்பினர் கலந்துக்கொண்டனர்.

# செங்கத்தில் மாற்றுத்திறனாளிகள் மருத்துவ முகாம்



**செங்கம்,செப் 22**

செங்கம் அனைவருக்கும் கல்வி வட்டார வளமையம் சார்பில் மாற்றுதிறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த மருத்துவ முகாம் நடைபெற்றது. 18வயதுக்கு உட்பட்ட மாற்றுதிறன் மாணவர்களுக்கான இந்த மருத்துவ முகாம் செங்கம் சகாய மாதா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. முகாமில் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமணை மருத்துவக் குழுவினர் கலந்துக்கொண்டு பல்வேறு பரிசோதணைகள் சிகிச்சைகள் ஆலோசணைகள் வழங்கி 306மாற்றுதிறனாளிகளுக்கு அடையாள அட்டை மற்றும் அடையாள அட்டை புதுப்பித்தல் செய்தனர். முகாமிற்கு ஒன்றியக்குழு தலைவர் விஜியராணி குமார் தலைமை தாங்கி அடையாள அட்டைகளையும் காது கேட்கும் கருவி போன்ற நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். முன்னதாக வட்டார வளமைய மேற்பாற்வையாளர் முருகன் வரவேற்று பேசினார். வட்டார கல்வி அலுவலர் உதயகுமாரன் முன்னிலை வகித்தார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சங்கர் ஆசிரியர் பயிற்றுனர்கள் பிரபாகரன் சங்கர்நாத் அண்ணாமலை சுகந்தி சிறப்பு ஆசிரியர்கள் மாசிலாமணி செல்வகுமாரி தசைப் பயிற்சியாளர் தரணி பகல் நேர பராமரிப்பு மைய பொறுப்பாளர் சரஸ்வதி உட்பட பலர் கலந்துக்கொண்டனர். முடிவில் ஆசிரியர் பயிற்றுனர் வைரம்மாள் நன்றி கூறினார்.

# செங்கம் முத்தமிழ் இலக்கிய மன்றம் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா



**செங்கம்,செப் 22**

செங்கம் முத்தமிழ் இலக்கிய மன்றம் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா நடைபெற்றது. விழாவுக்கு நூலக வாசகர் வட்ட தலைவர் முருகமணி தலைமை தாங்கினார். பேராசிரியர் தமிழன் பிரபு வரவேற்றுப் பேசினார்.பல் டாக்டர் ஸ்ரீதர் முன்னிலை வகித்தார். முத்தமிழ் இலக்கிய மன்ற தலைவர் ராமராகவன் பேச்சு போட்டியில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். முடிவில் கவிஞர் தமிழ்மதி நன்றி கூறினார். விழாவில் பகவான் கல்வி நிலைய தாளாளர் ராஜேஷ் நூலக வாசகர் வட்ட துணை தலைவர் அரங்கன் மணிமாறன் நூலகர் காமராஜ் பொறியாளர் ராஜேந்திரன் ஆசிரியர் சுரேஷ் குமார் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

# அரக்கோணத்தில் உலக அமைதி தினம் அனுசரிப்பு




**அரக்கோணம் செப் 22**

அரக்கோணத்தில் உலக அமைதி தினம் தேசிய திருச்சபை மாமன்றம் அர்பன் ரூரல் மிஷன் மற்றும் சமூக அமைப்புகள் பல இனைந்து அன்னை தெரேசா கிராம வளர்ச்சி நிறுனத்தில் நேற்று அனுசரித்தனர் பரவத்தூர் ஆயர் சத்யா, மற்றும் சார்லஸ் சுந்தரகுமார் ஆகியோர் தலைமை தாங்கினர்

முகமதுஅலி, ஜேக்கப், குளோ ஜேம்ஸ் சி சந்தர் ஜட்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் அனைவரையும் அன்னை தெரேசா நிறுவன செயலர் தேவஆசிர்வாதம் வவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக மத. தலைவர்கள் சேகர் லயன் சங்கத் தலைவர் உபயதுல்லா, புத்த மத தலைவர் பிக்கு பிரகாசம் குருத்வாரா நட்சத்திரசிங் மனவளக்களை மன்றத் தலைவர். இளங்கோ, தி க மண்டல தலைவர் எல்லப்பன் கிறிஸ்தவ சபை போதகர் ஆனந்தராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் .சிறப்பு அழைப்பாளர்களாக எஸ்சி எஸ்டி கூட்டமைப்பு தலைவர் நைனா மாசிலமணி, பேராசியர் அ.கலைநேசன் வி.சி.க கௌதம் பௌத்த இயக்க அறக்கட்டளை கோவி.பார்த்திபன் எஸ்வந்தராவ், ஜான்அன்பழகன் கவிஞர் மு.இஸ்மாயில் தீண்டாமை ஒழிப்பு செயளாளர் டைபி சீனிவாசன் ஒய்வு பெற்ற தலைமையாசிரியர் தேவசுந்தர் அரசு வழக்கறிஞர் பாபு, போளூர் கலைமணி ஆகியோர் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர் நிகழ்வில் விசிக துரை குணசேகரன் ஜெயராஜ் வஜ்ஜிரவேல் வழக்கறிஞர் குனா ஆசிரியர் தமிழ்வாணன் அருள்தாஸ் ஏசுபாதம் அகசியா மிஷினரி ரஞ்சித் பெண்கள் அமைப்பை சேர்ந்த பிரமிளா, ஜெயந்தி மற்றும் அஜித், ஆகாழ் பாபு ஆகியோரும் பங்கேற்றனர் உலக அமைதியை சீர்குலைக்கின்ற எவ்வித சக்திகளையும் முறியடிப்போம் என உறுதியேற்றனர் கடைசியாக சாம்ராஜ் நன்றி கூறினார்.

### இரும்பேடு கிராமத்தில்

# தண்ணீர் தேங்கிய பகுதிகளில் எம்.எல்.ஏ. ஆய்வு



**ஆரணி செப்22:**

ஆரணியில் புதன்கிழமை இரவு கன மழை பெய்தது என் நிலையில் ஆரணி அடுத்த எரிமேடு திருவிக நகர் பகுதியில் தண்ணீர் தேங்கி அப்பகுதியில் உள்ள வீடுகளில் புகுந்தது இதனால் பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். தகவல் அறிந்த ஆர்மி சட்டமன்ற உறுப்பினர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன் அப்பகுதிக்கு விரைந்து சென்று பார்வையிட்டார். பின்னர் உடனடியாக இரும்பேடு ஊராட்சி நிர்வாகத்தை தொடர்பு கொண்டு தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கூறினார் பின்னர் ஜேசிபி எந்திரம் மூலம் தண்ணீரில் வெளியேற்றப்பட்டது. மேலும் அப்பகுதியில் தண்ணீர் தேங்காதவாறு நிரந்தரமாக தீர்வு காண ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் புகார் செய்தார். மேலும் அப்பகுதி பொதுமக்களிடம் இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். அப்போது உடன் கூறினார் பின்னர் தண்ணீர் வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார் அப்போது உடன் அதிமுக நகர செயலாளர் அசோக்குமார், ஒன்றிய துணை செயலாளர் வேலு, ஒன்றிய குழு உறுப்பினர் கோபி, அண்ணா தொழிற்சங்க செயலாளர் சந்துரு, கிளை செயலாளர் ஆறுமுகம், உள்ளிட்டோர் உள்ளனர்.



**ஆரணி சைதாப்பேட்டை பவர்அவுஸ் தெருவில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலை வைத்து வழிபட்டனர். இந்த நிகழ்ச்சியில் சேவூர் எஸ்.ராமச்சந்திரன் எம்எல்ஏ பங்கேற்று சுவாமி தரிசனம் செய்து அப்பகுதி மக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.**

# அரக்கோணத்தில் தமாகா சார்பில் கண் பரிசோதனை முகாம்

**அரக்கோணம் செப்22**

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சட்ட மன்றத் தொகுதி தமாகா சார்பில் அறிவிப்பு வெளியாகி உள்ளது அதன் விவரம் வருமாறு. அரக்கோணம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதிகுள் அரிமா சங்க அலுவலக கட்டிடம் உள்ளது. இங்கு 252வது மாத கண் பரிசோதனை முகாம் நாளை ஏற்பாடு செய்யபட்டு உள்ளது. ஆகவே, கண் குறைவால் பாதிக்கபட்ட அனைவரும் தவறாமல் இம்முகாமில் பங்கேற்று பயனடையும் படியும் பங்கேற்று பயனடையும் அனைவருக்கும் வெள்ளி வீதி என்கிற செல்வி அம்மையாரின் 21வது வருட நினைவு மதிய உணவு வழங்க வும் ஏற்பாடு செய்யப்பட்டுயிருப்பதாகவும் இதனை அரிமா சங்க முன்னாள் ஆளுநர் ஆர்.அரிதாஸ் தொடங்கி வைக்க இருப்பதாகவும் தமாகா அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

### மேல்மலையனூர் வட்டாரத்தில்

# சிறார் நலத்திட்டம் மூலம் 9474 பள்ளி குழந்தைகளுக்கு பரிசோதனை

**செஞ்சி செப் 22.**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டார அளவிலான பள்ளி சிறார் நலத்திட்டம் மூலம் அங்கன்வாடி பள்ளிகளில் கல்வி பயிலும் பள்ளி குழந்தைகளுக்குமருத்துவ பரிசோதனை நிகழ்ச்சி நடைபெற்றது.கொழப்பலூர்ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில்வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் வெங்கடேசன் தலைமையில் மருத்துவர்கள் அனுஷ்யா, ஆனந்த் ஆகியோர் அடங்கிய மருத்துவ குழுவினரால்குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் இருதய நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்பட்டது.தொடர்ந்து 143 அங்கன்வாடி மையங்களை சேர்ந்த 5 வயதுக்குட்பட்ட 9474 குழந்தைகளுக்கு முதல்சுற்று பரிசோதனை செய்யப்பட்டது.

இதில் 257 க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு சிறிய அளவிலான உடல்நல பாதிப்புகள் கண்டறியப்பட்டு மருந்துகள் மாத்திரைகள் வழங்கப்பட்டன இதனை தொடர்ந்து 110 க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பேச்சுத்திறன் பாதிப்பு, பற்களை சீர் செய்தல், இருதய நோய் உள்ளிட்ட குறைபாடுகளை கண்டறிந்து மேல்சிகிச்சைக்காக மேல்மலையனூர் வட்டார பள்ளி சிறார் நலத்திட்ட மருத்துவ குழு மூலமாக விழுப்புரம் தலைமை அரசு மருத்துவ கல்லூரியில் DEIC சிறப்பு மருத்துவரிடம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

## அறிவிப்பு

காஞ்சிபுரம், சந்தவேலூர், நெ-4- கங்கா கார்டன் ஆண்டாள் நகர், முகவரி யில் வசிக்கும் ஜெயராமன் மகன் உமாசங்கர் ஆகிய நான் எனக்கு சொந்தமான கிரய ஆவணம் எண் 3703/2021, இதனை கடந்த 08-08-2023 அன்று அரக்கோணம் பத்தர பதிவு அலுவலகம் கொண்டு வந்த போது அங்கு காணவில்லை ஆகவே யாரிடமாவது எனது ஆவணம் கிடைத்தால் என்னிடம் தருமாறு கேட்டு கொள்கிறேன்.

இப்படிக்கு-
உமாசங்கர், காஞ்சிபுரம்

## அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், அயப்பாக்கம், திருவேற்காடு, சுந்தர சோழபுரம், அரவிந்த் நகர், நெ 37/ 1வது தெரு முகவரியில் வசிக்கும் ஏழுமலை மனைவி அமுதவள்ளி ஆகிய நான் எனக்கு சொந்தமான விற்பனை விக்கிரய ஆவணம் எண் 10420/2009 இதனை கடந்த 10-09-2023 அன்று அரக்கோணம் பத்தர பதிவு அலுவலகம் கொண்டு வந்த போது அங்கு காணவில்லை ஆகவே யாரிடமாவது எனது ஆவணம் கிடைத்தால் என்னிடம் தருமாறு கேட்டு கொள்கிறேன்.

இப்படிக்கு
அமுதவள்ளி
திருவேற்காடு

## பொது அறிவிப்பு

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், மூதூர் கிராமம் தலையாரி தெரு நெ-2/568 முகவரி யில் வசிக்கும் லேட். மணியின் மகன் சம்பத் ஆகிய எனது கட்சிக்காரர் இவரது தந்தை லேட் மணி த/பெ கோபால் இவர் கிரய ஆவணம் எண் 1281/1991ஐ கடந்த 20-08-2005 அன்று கை சோர்ந்து விட்டார். ஆகவே, யாரிடமாவது ஆவணம் கிடைத்தால் அதனை என்னிடம் கொடுக்கவும் அதே நேரத்தில் சொத்தின் மீது யாருக்காவது உரிமை இருந்தால் இந்த விளம்பரம் கண்ட 7 தினங்களுக்குள் என்னிடம் தெரிவிக்க வேண்டும் இல்லை யென்றால் எந்த வில்லங்கமும் இல்லை என தெரியபடுத்த படுகிறது

இப்படிக்கு-
V.சரவணன், MA.BL வழக்கறிஞர்,
அரக்கோணம். செல்.9597428681

## எண்ணூர் அனல்மின் நிலையத்தால் மீனவர்கள் மீன்பிடி தொழில் பாதிப்பு: அமைச்சர்களை சந்தித்தார் கே.பி.சங்கர் எம்எல்.ஏ.



**திருவொற்றியூர் செப். 22**

திருவொற்றியூர் சட்ட மன்ற தொகுதிக்கு உட்பட்ட எண்ணூர் கொசஸ்தலை ஆற்றுப்பகுதியில் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் அதனால் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் தமிழ்நாடு மின்சாரம் மற்றும் நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் ராணிப்பேட்டை ஆர். காந்தி ஆகியோரை எண்ணூர் 8 மீனவ கிராம நிர்வாகிகளுடன் கே.பி. சங்கர் எம்எல்ஏ சந்தித்தார்.

காலம் காலமாக மீனவர்கள் மீன் பிடித்து வந்த கொசுஸ்தலை ஆற்றுப்பகுதியில் அதிக அளவில் வெளியேற்றப்படும் நச்சுப்புகையாலும் சாம்பல் கழிவுகளாலும் சுடுநீராலும் மீன்வளம் முற்றிலுமாக அழிந்து விட்டது என்றும் அதனால் வாழ்வாதாரத்தை இழந்து வாடும் மீனவர்களுக்கு அதற்கு மாற்றாக அனல் மின் நிலையத்தில் பணியில் அமர்த்தப்படும் தொழிலாளர்களில் எண்ணூர் 8 கிராம மீனவ மக்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை வைத்து பல போராட்டங்கள் நடந்து வந்தது. இந்தநிலையில் தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான அரசு அமைந்த பின்பு மீனவர்கள் வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் நடைபெற்ற பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு ஏற்படாத நிலையில் இரண்டு அமைச்சர்களை சந்தித்து மீனவ மக்கள் சார்பில் கோரிக்கை மனு அளித்தனர்.



மதுரவாயல் தொகுதிக்கு உட்பட்ட 147 வது வார்டு அஷ்டலட்சுமி நகர், சீமாத்தம்மன் நகர்,பல்லவன் நகர் உட்பட்ட பகுதிகளில் பொருத்தபட்டுள்ள மின் மாற்றியை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்.உடன் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் ரமணிமாதவன், எம்.இ.ஸ்டாலின், வட்ட செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், ப.ஆலன், அன்னதாசன், ரூபன், ஜெயரத்தினம் உள்ளனர்.

## தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை விளக்கும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக நிகழ்ச்சிகள் நடத்திட ரூ. 28.76 கோடி மதிப்பீட்டில் கலாச்சார மையம்

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

**சென்னை,செப்.22**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் இராஜா அண்ணாமலைபுரத்தில் ரூ.28.76 கோடி மதிப்பீட்டில் தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை விளக்கும் வகையில் கலாச்சார மையம் கட்டடப்படவுள்ளது என அமைச்சர்.பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில்களின் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில்களின் வருவாய் இனங்களை முறைப்படுத்தி வசூலித்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

நமது பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை விளக்கிடும் வகையிலான கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், ஆன்மிக நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் ஏற்றதொரு மையம் அமைப்பது பக்தர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்ற வகையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2022-2023-ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் போது, "தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை விளக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான கலாச்சார மையம் முதற்கட்டமாக சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்படும். அம்மையத்தில் ஆன்மிக நூலகமும் அமைக்கப்படும். மேலும் மீட்கப்பட்ட தெய்வத் திருமேனிகள் அம்மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு சொந்தமான சென்னை, இராஜா அண்ணாமலைபுரம். தெற்கு கேசவபெருமாள்புரத்திலுள்ள சுமார் 22.80 கிரவுண்ட் இடத்தில் ரூ.28.76 கோடி மதிப்பீட்டில் கலாச்சார மையம் அமைக்க நிருவாக அனுமதி மற்றும் மதிப்பீடு அங்கீகாரம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்படும் இக்கலாச்சார மையமானது தரை தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 4,757 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டடப்படவுள்ளது. தரைதளத்தில் தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை விளக்கும் வகையிலான கண்காட்சி அரங்கம் மற்றும் உணவு உண்ணும் அறைகள், முதல் தளத்தில் மூன்று கலாச்சார பயிற்சி கூடங்கள் மற்றும் 120 நபர்கள் அமரும்படியான ஒரு செயல்திறன் கூடம், இரண்டாவது தளத்தில் மூன்று பல்நோக்கு கூடங்கள் மற்றும் 233 நபர்கள் அமரும்படியான வடிவமைப்புடன் கூடிய உணவு உண்ணும் அறை, மூன்றாவது தளத்தில் 231 நபர்கள் அமரும்படியான ஒரு பல்நோக்கு கூடம் மற்றும் 90 நபர்கள் அமர்ந்து உணவு உண்ணும் அறை ஆகியவை அமைக்கப்படவுள்ளன.

இக்கலாச்சார மையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு குறித்த காலத்திற்குள் நிறைவு செய்து பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இம்மையத்தில் நியாயமான வாடகையில் தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை விளக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும். மேலும், இங்கு ஆன்மிக நூலகம் ஒன்று அமைக்கப்படுவதோடு, மீட்கப்பட்ட தெய்வத் திருமேனிகளை பாதுகாப்பாக வைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

## சென்னை நேப்பியர் பாலத்திலிருந்து கூவத்தில் குதித்த பெண்ணை காப்பாற்றிய ஆட்டோ ஓட்டுநர்: போலீஸ் கமிஷனர் நேரில் அழைத்து பாராட்டு



**சென்னை,செப்.22**

சென்னை, திருவல்லிக்கேணிசேர்ந்தவர் மகேஷ், வாடகை ஆட்டோ ஓட்டி வருகிறார். மகேஷ் சம்பவத்தன்று ஆட்டோவில் சவாரிக்காக, நேப்பியர் பாலம் அருகே சென்று கொண்டிருந்தபோது, அங்கு கூட்டமாக சிலர் கூவம் ஆற்றை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது மகேஷ், ஆட்டோவை ஓரம் நிறுத்தி பார்த்தபோது, ஒரு பெண் பாலத்திலிருந்து கூவம் ஆற்றில் குதித்ததும், அந்த பெண் சேற்றில் மூழ்கி கொண்டிருந்ததும் தெரியவந்தது. உடனே, மகேஷ் கயிறு வழியாக, கூவம் ஆற்றில் இறங்கி சேற்றில் சிக்சி தவித்த பெண்ணை மீட்டு, கயிறு கட்டி பாலத்தில் கொண்டு சேர்த்தார். பின்னர் காவல் துறை உதவியுடன் மகேஷ் மற்றும் மீட்கப்பட்ட பெண் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சிகிச்சை பெற்றனர்.விசாரணையில், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மகேஷ், ஒரு வருடத்திற்கு முன், சென்னைக்கு வந்து ஆட்டோ ஓட்டி வருவதும், 2 பெண் குழந்தைகள் மற்றும் 1 மகன் உள்ளதும் தெரியவந்தது காவல் ஆணையாளர்.சந்தீப் ராய் ரத்தோர், பெண்ணை மீட்டு உயிரை காப்பாற்றிய மகேஷை நேரில் அழைத்து பண வெகுமதி ரூ.5,000 மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

## மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியத்தில் மாணவ-மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்

### எம்எல்ஏ நிவேதாமுருகன் வழங்கினார்



**மயிலாடுதுறை,செப்.22-**

மயிலாடுதுறை மாவட்ட பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் செம்பனார்கோயில் ஊராட்சியில் தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஆக்கூர் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு 140 மிதிவண்டிகள், ஆக்கூர் ஓரியண்டல் அரபி அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு 27 மிதிவண்டிகள் என மொத்தம் 167 மிதிவண்டிகள் வழங்கும் விழா ஆக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதாமுருகன் கலந்து கொண்டு விலையில்லா மிதிவண்டிகளை மாணவ மாணவிகளுக்கு வழங்கி விழா சிறப்புரையாற்றி பேசினார். இதில் ஆக்கூர் ஊராட்சிமன்ற தலைவர் சந்திரமோகன் வரவேற்றுபேசினார் இதில் செம்பனார்கோயில் ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர்.மத்திய ஒன்றிய செயலாளர் வக்குமார்.வடக்கு ஒன்றியசெயலர் அன்பு.ஒன்றியகுழு உறுப்பினர் கண்ணன்.முன்னிலை வகித்தனர் உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக பிரமுகர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## கோடியக்கரை வன உயிரின சரணாலயத்தில் பறவைகள் விலங்குகள் கணக்கெடுப்பு சூழ்நிலையியல் குறித்து சிறப்பு பயிற்சி

**வேதாரண்யம்,செப்.22-**

வேதாரண்யம் அருகே கோடியக்கரையில் ராம்சார் அங்கீகாரம் பெற்ற வன உயிரின சரணாலயத்தில் பறவைகள் மற்றும் விலங்குகள் கணக்கெடுப்பு பணி சூழ்நிலையியல் குறித்து வனத்துறையினர் மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது இந்த பயிற்சியை நாகை மாவட்ட வனஉயிரினக் காப்பாளர் அபிஷேக் தோமர் துவக்கி வைத்தார் கோடியக்கரை வனச்சரகர் அயூப்கான் முன்னிலை வகித்தார் வனவர் ராமதாஸ் வரவேற்றார். சரணாலயங்களில் பறவைகள் மற்றும் விலங்குகள் கணக்கெடுப்பு நடைபெற உள்ளநிலையில் வனத்துறையினர் மாணவர்கள் என 200 பேருக்கு 40 நபர்கள் வீதம் ஐந்து கட்டங்களாக பயிற்சி அளிக்கப் பட உள்ளது இந்த பயிற்சி 20.ம் தேதி தொடங்கி; அக்டோபர் 6ம் வரை ஐநது நாட்கள் மட்டும் நடைபெறுகிறது கோடியக்கரை சரணாலயத்திற்கு வலசை வரும் பல வகையான வெளிநாட்டு நீர்பறவைகளின் வகைகள், நிலப் பறவைகள் வகைகள் அவைகள் வந்து செல்லும் நோக்கம். பறவைகளின் கணக்கெடுப்பு ஆகியன குறித்து திருச்சி வன உயிரின மண்டலத்தை சேர்ந்த திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்;டை, தஞ்சை, திருவாரூர் மயிலாடுதுறை நாகை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வனவர்கள், வனக்காப்பாளர்கள், வனக்காவலர்கள். வேட்டைத்தடுப்பு காவலர்கள் மற்றும் ஏவிசி கல்லூரி மாணவ மாணவிகள் ஆகியோருக்கு மயிலாடுதறை தனியார் கல்லூரி உதவி பேராசிரியர்கள் பாண்டியன், பாஸ்கர் ஆகியோர் செயல் விளக்க பயிற்சி அளித்தனர்

## சென்னையில் அடுக்குமாடி குடியிருப்பில் பதுக்கிய போதை பவுடர் பறிமுதல்: ஒருவர் கைது

**சென்னை செப் 22-**

தண்டையார்பேட்டையில் அடுக்குமாடி குடியிருப்பில் போதை பவுடர் பதுக்கிய ஒருவரை போலீசார் கைது செய்தனர். தண்டையார்பேட்டை வைத்தியநாதன் தெருவில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் சுந்தர் (வயது 60). இவர் மீது போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக பல்வேறு புகார்கள் வந்தன. அதன்படி மத்திய போதை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் கடந்த 2 நாட்களாக தண்டையார்பேட்டை பகுதியில் முகாமிட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அதைத்தொடர்ந்து, வைத்தியநாதன் தெருவில் உள்ள சுந்தர் குடியிருக்கும் அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று இரவு போதை தடுப்பு போலீசார் தீவிர சோதனை மேற்கொண்டனர். அப்போது வீட்டில் விற்பனைகாக பதுக்கி வைக்கப்பட்ட 1/2 கிலோ 'மெத்தபேட்டமின்' போதை பவுடர் பறிமுதல் செய்யப்பட்டது.

அதைத்தொடர்ந்து, வைத்தியநாதன் தெருவில் உள்ள சுந்தர் குடியிருக்கும் அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று முன் தினம் இரவு போதை தடுப்பு போலீசார் தீவிர சோதனை மேற்கொண்டனர். அப்போது வீட்டில் விற்பனைகாக பதுக்கி வைக்கப்பட்ட 1/2 கிலோ 'மெத்தபேட்டமின்' போதை பவுடர் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் தலைமறைவான சுந்தரை உடனடியாக ஆஜராகும்படி வீட்டில் இருந்த அவரது மனைவியிடம் போலீசார் சம்மன் வழங்கி உள்ளனர். இது தொடர்பாக சுந்தரின் உறவினரான தண்டையார்பேட்டை நேதாஜி நகரை சேர்ந்த ராமலிங்கம் என்பவரை கைது செய்த மத்திய போதை கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் விசாரணை நடத்திவருகிறார்கள்.

## சென்னை விமான நிலையத்தில் 20 சுங்க இலாகா அதிகாரிகள் இடமாற்றம்

**சென்னை செப் 22-**

சென்னை விமான நிலையத்தில் ஒரே நாளில் 113 பேரிடம் இருந்து ரூ.14 கோடி தங்கம், ஐபோன்கள் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

**இடமாற்றம்**

இதன் எதிரொலியாக 20 சுங்க இலாகா அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர். சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்திற்கு கடந்த 13-ந் தேதி ஓமன் நாட்டு தலைநகர் மஸ்கட்டில் இருந்து பயணிகள் விமானம் வந்தது. அந்த விமானத்தில் 186 பயணிகளில் சுமார் 113 பேர் தங்கம் கடத்தி வருவதாக சென்னை விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து சுங்க இலாகா அதிகாரிகள் விமானத்தில் வந்த சென்னை, திருச்சி, புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த 113 பயணிகளை வெளியில் செல்ல விடாமல் சுங்க இலாகா அலுவலகத்திற்குள் வைத்து சோதனைகள் நடத்தினர்.

அதில் பிடிபட்டவர்கள் தங்கம் கடத்தும் தொழிலில் ஈடுபடும் குருவிகள் என தெரியவந்தது. இவர்கள் 113 பேரிடம் இருந்து ரூ.14 கோடி மதிப்புள்ள 13 கிலோ தங்கம், ஐபோன்கள் உள்பட மின்சாதன பொருட்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

ஓமனில் இருந்து ஒரே விமானத்தில் கடத்தி வரப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதன் எதிரொலியாக சென்னை விமான நிலைய சுங்க இலாகா பிரிவில் பணியாற்றிய 4 சூப்பிரண்டுகள், 16 இன்ஸ்பெக்டர்கள் சென்னை சுங்க இலாகா தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்து விமான நிலைய சுங்க இலாகா முதன்மை கமிஷனர் உத்தரவிட்டு உள்ளார்.

மேலும் துணை கமிஷனர்கள், உதவி கமிஷனர்கள் என சிலரை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. சென்னை விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் 20 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## சென்னை காசிமேடு மீன்மார்க்கெட்டில் பரபரப்பு: ரவுடியை ஓட ஓட விரட்டி வெட்டிய 7 பேர் கும்பல்

**சென்னை செப் 22-**

எர்ணாவூர், நேதாஜி நகரை சேர்ந்தவர் சூர்யா என்கிற கேரளா சூர்யா (வயது 22).ரவுடி. இவர் மீது கொலை உள்பட மொத்தம் 7 வழக்குகள் உள்ளன.

இந்நிலையில் நேற்று முன் தினம் இரவு சூர்யா காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் ஏலம் விடும் இடத்திற்கு வந்தார்.அப்போது பின் தொடர்ந்து வந்த 7 பேர் கும்பல் திடீரென கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் அவரை சுற்றி வளைத்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த சூர்யா அவர்களிடம் இருந்து தப்பிக்க ஓடினார்.ஆனால் மர்ம கும்பல் அவரை ஓட, ஓட விரட்டி சரமாரியாக வெட்டினர். இதில் தலை, கழுத்தில் பலத்த வெட்டுக்காயம் அடைந்த சூர்யா ரத்த வெள்ளத்தில் சரிந்தார். உடனே மர்ம கும்பல் அங்கிருந்து தப்பி சென்றுவிட்டனர்.இதனை கண்டு மீன்பிடி துறைமுகத்தில் இருந்த மீனவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து காசிமேடு மீன்பிடி துறைமுக போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் விரைந்து வந்து உயிருக்கு போராடிய சூர்யாவை மீட்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமிரா காட்சியை வைத்து மர்ம கும்பல் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## போலி ஆவணம் தயாரித்து ரூ.3 கோடி நிலத்தை விற்ற தரகர் கைது

**சென்னை செப் 22-**

போலி ஆவணம் தயாரித்து ரூ.3 கோடி நிலத்தை விற்ற தரகரை போலீசார் கைது செய்தனர். சென்னையை அடுத்த புழல் ஆட்டந்தாங்கல் பஜனை கோவில் தெருவை சேர்ந்தவர் வெங்கடேசன் (வயது 54). பாடியநல்லூர் பகுதியில் உள்ள இவருக்கு சொந்தமான ரூ.3 கோடி நிலத்தை சிலர் போலி ஆவணம் தயாரித்து வேறு சிலருக்கு விற்றது தெரிந்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து ஆவடி போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் உள்ள மத்திய குற்றப்பிரிவு போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து போலி ஆவணம் தயாரித்து நில மோசடி செய்த நில தரகரான திரு.வி.க நகரை சேர்ந்த ராமய்யா (73) என்பவரை கைது செய்தனர்.

## ரூ.10 ஆயிரம் லஞ்சம் வாங்கிய மின்வாரிய என்ஜினீயர் கைது

**சென்னை செப் 22-**

அடையாறை சேர்ந்தவர் கிருஷ்ணகுமார். இவர் புதிதாக கட்டியுள்ள வீட்டுக்கு மின் இணைப்பை பெறுவதற்காக பெசன்ட் நகரில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்தார். அப்போது உதவி பொறியாளர் பாலசுப்பிரமணியம் ரூ.10 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார்.

இதனை கொடுக்க விரும்பாத கிருஷ்ணகுமார் அது பற்றி லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் செய்தார்.போலீசார் கொடுத்த ரசாயன பவுடர் தடவிய ரூபாய் நோட்டை கிருஷ்ணகுமார் பாலசுப்பிரமணியத்திடம் கொடுத்தார். அப்போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் பாலசுப்பிரமணியத்தை கைது செய்தனர்.

## சென்னை கே.கே. நகரில் பெண்ணிடம் ரூ.33 ஆயிரம் பறிப்பு

**சென்னை செப் 22-**

சென்னை, எம்.ஜி.ஆர் நகர், அடுத்த நெசப்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் ரவிச்சந்திரன். இவரது மனைவி செல்வி (50).அதே பகுதியில் வீட்டு வேலை பார்த்து வருகிறார். இவர் நேற்று முன் தினம் மாலை அடமானம் வைத்திருந்த நகையை திரும்புவதற்காக கே.கே நகர் வேம்புலி அம்மன் கோவில் தெரு வழியாக ரூ.33 ஆயிரத்தை கைப்பையில் வைத்துக்கொண்டு நடந்து சென்றார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் 2பேர் திடீரென செல்வி வைத்திருந்த பணப்பையை பறித்து தப்பி சென்று விட்டனர். இதுகுறித்து கே.கே நகர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புழல் பகுதியில் பெயிண்டர் கொலையில் நண்பர் கைது

**சென்னை செப் 22-**

சென்னை, புழல், சைக்கிள் ஷாப், அறிஞர் அண்ணாநகர் மெயின் ரோட்டில் வசித்து வந்த சரவணன், என்பவர் பெயிண்டிங் வேலை செய்து வந்தார். சரவணன் நேற்று முன் தினம் இரவு வீட்டினருகே அவரது நண்பர் மணி (எ) சஞ்சய் என்பவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டு, வாய் தகராறு முற்றிய நிலையில், மணி (எ) சஞ்சய் அருகிலிருந்த இரும்பு பைப்பால் சரவணனை தாக்கி கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றார். இது குறித்து சரவணனின் தாயார் கொடுத்த புகாரின் மீது புழல் காவல் நிலையத்தில் கொலை உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

புழல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து மேற்படி கொலை சம்பவத்தில் ஈடுபட்ட மணி (எ) சஞ்சய், என்பவரை நேற்று கைது செய்தனர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய இரும்பு பைப் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் சரவணன் அவரது மனைவியை பிரிந்து மேற்படி முகவரியில் தனியாக வசித்து வருவதும், சம்பவத்தன்று சரவணன் மற்றும் மணி (எ) சஞ்சய் ஆகியோர் மதுபோதையில் பேசிக் கொண்டிருந்தபோது, வாக்குவாதம் ஏற்பட்டபோது, மணி (எ) சஞ்சய் அருகிலிருந்த இரும்பு பைப்பால் சரவணனை தாக்கி கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றதும் தெரியவந்தது. மேலும் விசாரணையில் எதிரி மணி (எ) சஞ்சய் மீது ஏற்கனவே 1 வழிப்பறி உட்பட 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

## நெப்புகை ஊராட்சியில் குப்பை இல்லா விழிப்புணர்வு பிரச்சாரம்



**கந்தர்வகோட்டை,செப்.22-**

தமிழக அரசின் வழிகாட்டின் படியும் மாவட்ட கலெக்டர் மற்றும் திட்ட இயக்குனர் அறிவுறுத்தல் படியும் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டை ஒன்றியத்தில் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் காந்தி ஜெயந்தி நாளான அக்டோபர் 2ம் தேதி வரை தூய்மை பாரதம் மற்றும்" குப்பை இல்லா இந்தியா" பிரச்சார இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இதில் ஒரு பகுதியாக நெப்புகை ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம் தலைமையில் அரசு நடுநிலைப் பள்ளியில் மாணவர்கள் சுய உதவி குழு மகளிர்கள் மற்றும் பொதுமக்களிடம் சுகாதார விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இதில் பள்ளி மாணவர்களிடையே மக்கும் குப்பை மக்கா குப்பை பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தாமல் செல்போன் பயன்படுத்தாமல் இருக்க வேண்டியது மற்றும் கிராமத்தினை சுகாதாரமாக குப்பை இல்லா கிரகமாக வைத்திருப்பது போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம் அவர்களால் மரக்கன்றுகள் நடப்பட்டது மரங்களின் நன்மைகளை விளக்கி மரம் வளர்ப்போம் மழை பெறுவோம் என்ற வாசகங்கள் அடங்கிய உறுதிமொழி எடுக்கப்பட்டது இதில் ஊராட்சி செயலர் பள்ளி தலைமை ஆசிரியர் தூய்மை காவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுக்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியை வட்டார ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி ஒருங்கிணைத்தார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

ஆசிய விளையாட்டு பெண்கள் கிரிக்கெட்:

# இந்தியா-மலேசியா இடையிலான ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது




**ஹாங்சோவ்,செப்.22**

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவ் நகரில் வருகிற 23-ம் தேதி தொடங்குகிறது. ஆனால் துவக்க விழா நடைபெறுவதற்கு முன்னதாகவே கால்பந்து, கிரிக்கெட், வாலிபால், பீச் வாலிபால் உள்ளிட்ட சில போட்டிகள் ஆரம்பமாகின்றன.


அந்த வகையில் ஆசிய விளையாட்டு போட்டியில் பெண்கள் கிரிக்கெட் போட்டி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் பெண்கள் கிரிக்கெட்டில் நேற்று நடைபெற்ற முதல் காலிறுதி போட்டியில் ஸ்மிருதி மந்தனா தலைமையிலான இந்திய அணி, மலேசியா அணியுடன் மோதியது. இந்த போட்டியில் டாஸ் வென்ற மலேசியா அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது.

இந்திய அணி சார்பில் தொடக்க வீராங்கனையாக களமிறங்கிய அணியின் கேப்டன் ஸ்மிருதி மந்தனா 27 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். 5.4 ஓவர்கள் முடிவில் இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 60 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. பின்னர் மழை நின்ற பிறகு மீண்டும் ஆட்டம் தொடங்கியது. போட்டி 15 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

சிறப்பாக விளையாடிய மற்றொரு தொடக்க வீராங்கனை ஷபாலி வர்மா 67 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஜெமிமா 47 ரன்களும் ரிச்சா கோஷ் 21 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த நிலையில் 15 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 173 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து 174 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மலேசியா அணி பேட்டிங்கை தொடங்கியது. இரண்டு பந்துகள் வீசப்பட்ட நிலையில் மலேசிய அணி 1 ரன் எடுத்தது. இதையடுத்து மீண்டும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து மழை நிற்காததால் ஆட்டம் கைவிடப்பட்டது. இருப்பினும் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

# ஆசிய விளையாட்டு; வங்காளதேசத்தை வீழ்த்தி முதல் வெற்றியை பதிவு செய்தது இந்தியா



**ஹேங்ஜவ்,செப்.22**

ஆசியாவிலுள்ள நாடுகளுக்கிடையே நடைபெறும் பல்வேறு போட்டிகளை உள்ளடக்கிய ஆசிய விளையாட்டு போட்டிகள் (Asian Games) சீனாவில் நடைபெறுகிறது. சீனாவின் ஹேங்ஜவ் நகரில் ஜியாவோஷான் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற க்ரூப் ஏ (Group A) விளையாட்டுகளில் இந்தியா, வங்காள தேசத்தை நேற்று 1-0 எனும் கோல்கணக்கில் தோற்கடித்தது. முந்தைய ஆட்டத்தில் சீனாவிடம் இந்தியா 5-1 எனும் கோல்கணக்கில் மோசமான தோல்வியை சந்தித்தது.

எனவே, இன்றைய வங்காள தேச போட்டியில் கிடைத்த வெற்றியின் மூலம், இந்தியா இப்போட்டி தொடரில் தனது இடத்தை தக்க வைத்து கொண்டுள்ளது.

ஆட்டத்தின் முதற்பகுதியில் கோல் போடுவதற்கு கிடைத்த பல நல்ல சந்தர்ப்பங்களை இந்தியா கோட்டை விட்டது. ஆட்டத்தின் இரண்டாவது பகுதியிலும் கிட்டத்தட்ட இதே நிலை நீடித்தது.

ஆனால் ஆட்ட நேரத்தின் 85-வது நிமிடத்தில் வங்காள தேசத்தின் கேப்டன் ரஹ்மத் மியா ஒரு ஃபவுல் ஆட்டம் ஆடியதை தொடர்ந்து இந்தியாவிற்கு ஒரு பெனால்டி ஆடும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது இந்திய கேப்டன் சுனில் சேத்ரி முன்வந்து சிறப்பாக கோல் போட்டார். இதன் மூலம் 1-0 எனும் கோல் கணக்கில் இந்தியா வென்று, ஆட்டத்தொடரிலிருந்து வெளியேறாமல் தனது நிலையை தக்க வைத்து கொண்டுள்ளது.

இந்தியா- ஆஸ்திரேலியா ஒருநாள் தொடர்;

# முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் முக்கிய வீரர்கள் விலகல்




**புது டெல்லி.செப்.22.**

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாட உள்ளது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் நாளை மொகாலியில் நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர்கள் மிட்செல் ஸ்டார்க் மற்றும் கிளென் மேக்ஸ்வெல் அணியில் இடம்பெற மாட்டார்கள் என அணியின் கேப்டன் பேட் கம்மின்ஸ் அறிவித்துள்ளார். காயத்திலிருந்து மீண்டு வரும் இருவரும் அடுத்த ஆட்டத்தில் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது

கரீபியன் பிரீமியர் லீக் போட்டி:

# டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்

**கயனா.செப்.22.**

கரீபியன் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் தொடரின் குவாலிபையர்-1 நேற்று நடைபெற்றது. இதில் கயானா அமேசான் வாரியர்ஸ் மற்றும் டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியின் கேப்டன் பொல்லார்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

இதனையடுத்து முதலில் பேட்டிங் செய்த கயானா அமேசான் வாரியர்ஸ் 20 ஓவரில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 166 ரன்கள் சேர்த்தது. அந்த அணியின் தொடக்க வீரர் சாய்ம் ஆயுப் 39 பந்துகளில் 49 ரன்களும், விக்கெட் கீப்பர் அசாம் கான் 27 பந்துகளில் 36 ரன்களும் சேர்த்தனர்.

பின்னர் 166 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணி களம் இறங்கியது. அந்த அணியின் தொடக்க வீரர் சாத்விக் வால்டன் அதிரடியாக விளையாடி ஆட்டமிழக்காமல் 57 பந்துகளில் 80 ரன்கள் விளாச, டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணி 18.1 ஓவரில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து, இலக்கை எட்டி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஜமைக்கா தல்லாவாஸ்- கயானா அமேசான் வாரியர்ஸ் அணிகளுக்கு இடையிலான குவாலிபையர்-2 ஆட்டம் 23-ந்தே1 நடைபெற இருக்கிறது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# தருமபுரி: பள்ளி குடிநீர் தொட்டியில் மனிதக்கழிவு கலந்ததாக புகார்

**தருமபுரி, செப். 22-**

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே உள்ள அரசு பள்ளியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்த நிலையில், பள்ளியின் குடிநீர் தொட்டியில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக மாணவர்கள் ஆசிரியரிடம் தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து, ஆசிரியர்கள் குடிநீர் தொட்டியை சோதனை செய்தனர். அப்போது அதில் அசுத்தம் கலந்து இருந்தது தெரியவந்தது. பின்னர், உடனடியாக இதுகுறித்து அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில், வட்டார கல்வி அலுவலர் மற்றும் போலீசார் பள்ளிக்கு சென்று குடிநீர் தொட்டியை ஆய்வுசெய்து வருகின்றனர். மாணவர்கள் குடிக்கும் தண்ணீரில் கலந்திருந்தது மனிதக்கழிவா, அல்லது குரங்கு உள்ளிட்ட வேறு ஏதேனும் விலங்குகளின் கழிவா என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

# யூடியூபர் வாசனின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து கோர்ட் உத்தரவு

**காஞ்சிபுரம், செப். 22-**

யூடியூபர் வாசனின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து காஞ்சிபுரம் குற்றவியல் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

பிரபல யூடியூபர் வாசன் கோவைக்கு சென்று கொண்டிருந்த போது காஞ்சிபுரம் அருகே பைக் வீலிங் செய்து விபத்தில் சிக்கினார். இதில், அவருக்கு கை முறிவு ஏற்பட்டது. பைக் வீலிங் செய்து, விபத்தில் சிக்கிய நிலையில் வாசன் மீது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் வாகனம் ஓட்டுதல் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து காஞ்சிபுரம் போலீசார் கைது செய்தனர்.

இதையடுத்து, மருத்துவ பரிசோதனைக்கு பிறகு காஞ்சிபுரம் குற்றவியல் கோர்ட்டில் வாசன் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை அக்டோபர் 3-ம் தேதி வரை சிறையில் வைக்க காஞ்சிபுரம் குற்றவியல் கோர்ட்டு உத்தரவிட்டது. இதையடுத்து புழல் சிறையில் வாசன் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் காஞ்சிபுரம் குற்றவியல் கோர்ட்டில் ஜாமீன் கோரி வாசன் மனுத்தாக்கல் செய்தார். இந்த ஜாமீன் மனுவை விசாரித்த காஞ்சிபுரம் குற்றவியல் கோர்ட்டு, யூடியூபர் வாசனுக்கு ஜாமீன் வழங்க மறுப்பு தெரிவித்து, அவரது ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

# வன்முறைக்கு மூளையாக செயல்பட்டதாக இம்ரான்கான் மீது மேலும் ஒரு வழக்கு

**லாகூர், செப்.22-**

வன்முறைக்கு மூளையாக செயல்பட்டதாக இம்ரான்கான் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான், கடந்த மே 9-ம் தேதி ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து, நாடு தழுவிய அளவில் போராட்டங்கள், வன்முறை நடைபெற்றது. இதை தொடர்ந்து இம்ரான்கான் பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

வன்முறையின் போது ராவல்பிண்டியில் உள்ள ராணுவ தலைமையகம் உட்பட அரசாங்க கட்டிடங்கள் சேதப்படுத்தப்பட்டன. போலீஸ் மற்றும் பிற பாதுகாப்பு அமைப்புகளின் 100-க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இந்த வன்முறைக்கு மூளையாக செயல்பட்டதாக இம்ரான்கான் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த வழக்கில் அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# சுவிட்சர்லாந்தில் பெண்கள் புர்கா உடை அணிய தடை

**சூரிச், செப். 22-**

ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்து பொதுவெளிகளில் பெண்கள், தங்கள் முகத்தை மறைக்க அணியும் புர்கா போன்ற உடைகளுக்கு தடை விதிக்கும், சட்டத்தை அமல்படுத்தி உள்ளது.

இந்த சட்டம் சுவிட்சர்லாந்து பாராளுமன்றத்தில் 151-29 என்ற அடிப்படையில் நிறைவேறியது, இது ஏற்கனவே மேலவையால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த சட்டம் அமலுக்கு வந்தால், உணவகங்கள், விளையாட்டு மைதானங்கள், பொது போக்குவரத்து, சாலைகளில் நடந்து செல்லும் போது என, அனைத்து பொது இடங்களிலும் புர்கா அணிய தடை விதிக்கப்படும்.

எனினும், மத வழிபாட்டுத் தலங்களில், இதற்கு தடை விதிக்கப்படாது என கூறப்படுகிறது. தடையை மீறுபவர்களுக்கு சுவிட்சர்லாந்தின் 1,000 பிராங்குகள் வரை அபராதம் விதிக்கப்படும்.

# மகளிர் மசோதாவுக்கு நடிகை தமன்னா பாராட்டு



**புது டெல்லி, செப். 22-**

புதிய பாராமன்ற கட்டிடத்துக்கு சிறப்பு அழைப்பாளராக சென்றிருந்த நடிகை தமன்னா, மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை பாராட்டி கருத்து தெரிவித்தார்.

கடந்த 18-ம் தேதி நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் தொடங்கியது. இந்த கூட்டத் தொடரின் இரண்டாவது நாள் கூட்டம் புதிய பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்றது. அதில் முதல் மசோதாவாக, மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், புதிய பாராடாளுமன்ற கட்டிடத்தை பார்வையிட நடிகைகள் தமன்னா, திவ்யா தத்தா உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டு கலந்து கொண்டனர். பாராளுமன்ற கட்டிட்டத்தை பார்த்த பின்பு அவர்கள் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு வரவேற்று கருத்து தெரிவித்தனர்.

இது தொடர்பாக நடிகை தமன்னா கூறுகையில், இது ஒரு விழிப்புணர்வு என கருதுகிறேன். திரையுலகைச் சேர்ந்தவர்கள் அரசியலுக்குள் நுழைவது கடினம் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், பெண்களுக்கான இந்த இட ஒதுக்கீடு மசோதா என்பது சாமானிய மக்களையும் அரசியலில் சேரத் தூண்டும் என்றார். நடிகை திவ்யா தத்தா கூறுகையில், இந்த மசோதா மிக முக்கியமான முன்னேடுப்பு. இதன் மூலம் பெண்கள் முன்னிலைப்படுத்தபடுவார்கள். புதிய நாடாளுமன்றத்தை பார்க்க வாய்ப்பு கிடைத்தது சிறந்த அனுபவம் என்றார்.

நிலவில் இன்று துவங்கும் பகல் பொழுது:

# விக்ரம் லேண்டர், பிரக்யான் ரோவர் விழித்தெழுமா..?

## இஸ்ரோ விஞ்ஞானிகள் எதிர்பார்ப்பு

**சென்னை, செப். 22-**

நிலவில் ஸ்லீப் மோடில் வைக்கப்பட்டுள்ள சந்திரயான்-3ன் விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவர் விண்கலன்கள் விரைவில் விழித்தெழும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான பணியில் இஸ்ரோ தரை கட்டுப்பாட்டு மைய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கடந்த ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி மாலை 6.04 மணிக்கு நிலவின் தென்துருவத்தில் தரையிறக்கப்பட்டது. அதில் இருந்து பிரக்யான் ரோவர் நிலவில் இறங்கியது.

லேண்டர் தரையிறங்கிய இடத்தில் இருந்தும், ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் ஆய்வு செய்தன. இந்நிலையில், நிலவில் பகல் பொழுது முடிந்ததால் லேண்டரும், ரோவரும் அணைக்கப்பட்டன.

இந்த சூழலில் நிலவில் பகல் பொழுது இன்று (செப்.22) தொடங்கும் என் எதிர்பார்க்கப்படுகிறது. பகல் தொடங்கிய பிறகு சூரிய சக்தி மூலம் லேண்டரும், ரோவரும் மின்சக்தியை உற்பத்தி செய்து மீண்டும் விழித்தெழ வாய்ப்பு உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், நிலவின் தென் துருவ பகுதியில் இரவு நேரத்தில் -200 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அதீத குளிர் நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை தாங்கும் அளவுக்கு சந்திரயான்-3 விண்கலன்கள் கட்டமைக்கப்படவில்லை என தெரிகிறது.

இருப்பினும் விண்கலன்கள் ஸ்லீப் மோடுக்கு சென்ற போது முழுவதும் சார்ஜ் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. விண்கலன்கள் விழித்தெழுமா என்பது கணிக்க முடியாதது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஏனெனில் 14 பூமி நாட்கள் இயங்கும் வகையில் இந்த கலன்கள் வடிவமைக்கப்பட்டு உள்ளது. நிலவில் ஓர் பகல்/இரவு என்பது பூமியின் 14 நாட்களுக்கு சமம்.

லேண்டரும், ரோவரும் மீண்டும் விழித்தெழுந்தால் நிலவின் மேற்பரப்பில் ஆய்வு மேற்கொண்டு கூடுதல் தகவல்களை இஸ்ரோ சேகரிக்கும். ஸ்லீப் மோடுக்கு செல்வதற்கு முன்பு சுமார் 40 செ.மீ உயரத்துக்கு மேல் எழுப்பப்பட்டு, 30 முதல் 40 செ.மீ தொலைவில் பத்திரமாக தரையிறக்கப்பட்டு இடம் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 2-வது நாளாக வருமானவரி துறை சோதனை

**சேலம், செப். 22-**

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 2-வது நாளாக நேற்றும் வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு சொந்தமான மேட்டூர் அனல் மின் நிலையத்தில் நிரந்தரமாகவும், ஒப்பந்த அடிப்படையிலும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிகின்றனர். இங்கு, சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் 850-க்கும் மேற்பட்ட பணியாளர்களை பணியில் அமர்த்தியுள்ளது. மேலும், நிலக்கரி அரவை, சாம்பல் கையாளும் பிரிவிலும் தனியார் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், அந்த தனியார் நிறுவனம் வரி ஏய்ப்பு செய்துள்ளதாக புகார் எழுந்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் காலை 5 பேர் கொண்ட வருமான வரித் துறை அதிகாரிகள் குழுவினர், மேட்டூர் அனல்மின் நிலைய வளாகத்தில் உள்ள அந்த தனியார் நிறுவன அலுவலகத்திலும், அனல் மின் நிலையத்திலும் சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனை இரவு 8.30 மணிக்கு முடிந்தது. இதில், அலுவலகத்திலிருந்து முக்கியமான ஆவணங்கள் மற்றும் கோப்புகளை அதிகாரிகள் கைப்பற்றி சென்றனர்.

தொடர்ந்து, 2-வது நாளாக நேற்றும் 3 பேர் கொண்ட வருமான வரித் துறை அதிகாரிகள் காலை 10 மணி முதல் சோதனையில் ஈடுபட்டனர். இதில் நேற்று நடந்த சோதனையில் கைப்பற்றிய ஆவணங்களை கொண்டு ஊழியர்களிடம் விசாரணை நடத்தினர். இந்த தனியார் நிறுவனம் மேட்டூர் அனல்மின் நிலையத்தில் கடந்த 2016-ம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை பணியில் அமர்த்தியுள்ளது என கூறப்படுகிறது. இதனால் அப்போதிருந்து பயன்படுத்தி வந்த ஆவணங்கள், நிதி கணக்குகள் உள்ளிட்டவற்றை கைப்பற்றி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், நிலக்கரி அரவை, சாம்பல் கையாளும் பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனங்கள் எண்ணிக்கை, அதற்கான பராமரிப்புக்கு செலவு செய்த தொகை, ரசீது உள்ளிட்டவற்றையும் கைப்பற்றி விசாரித்து வருகின்றனர்.

# கடனைத் திருப்பி தராதவர்களுக்கு சாக்லெட் அளிக்கும் நூதன திட்டம்

## அமல்படுத்த தொடங்கியது எஸ்.பி.ஐ. வங்கி

**புது டெல்லி,செப். 22-**

கடன் தவணையை உரிய தேதியில் திருப்பித் தராத வாடிக்கையாளர்களின் இல்லத்துக்குச் சென்று சாக்லெட் அளிக்கும் நூதன திட்டத்தை இந்தியாவின் மிகப் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) அமல்படுத்தத் தொடங்கியுள்ளது.

இது குறித்து வங்கி வட்டாரங்கள் தெரிவித்ததாவது:

கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான மாதாந்திர தவணைக் காலம் கடந்த பிறகும், அதற்கான தொகையை செலுத்தாத வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசி மூலம் வங்கி அழைப்பு விடுத்து வருகிறது. அத்தகைய அழைப்புகளை வாடிக்கையாளர்கள் தொடர்ந்து ஏற்காமல் இருப்பது, அவர்களுக்கு கடனைத் திருப்பிச் செலுத்தும் எண்ணம் இல்லை என்பதற்கான அறிகுறிகளாகக் கருதப்படுகிறது.

அதுபோன்ற வாடிக்கையாளர்களிடமிருந்து கடன் தவணையை வசூலிப்பதற்கு, அவர்களது இல்லத்துக்கோ, அலுவலகத்துக்கோ முன்னறிவிப்பின்றி நேரில் செல்வதே சிறந்த வழியாகும். அதற்காக, சாக்லெட்டுகளுடன் வாடிக்கையாளர்களின் இல்லத்துக்கு வசூல் அதிகாரிகளை அனுப்பும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

# இலங்கை கேப்டனாக இருந்து வரும் தசுன் ஷனகா தனது பதவியில் இருந்து விலக இருப்பதாக தகவல்

**கொழும்பு.செப்.22.**

இலங்கை அணியின் கேப்டனாக இருந்து வரும் தசுன் ஷனகா, உலகக் கோப்பைக்கு முன்னதாக தனது பதவியில் இருந்து விலக இருப்பதாக செய்திகள் வெளியாகி வருகிறது. சமீபத்தில் தசுன் ஷனக தலைமையிலான இலங்கை அணி ஆசியக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய அணியிடம் படுதோல்வி அடைந்தது. இதையடுத்து, உலகக் கோப்பைக்கு முன்னதாக தசுன் ஷனகாவை கேப்டன் பதவியில் இருந்து நீக்க இலங்கை கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஷனகாவுக்குப் பதிலாக விக்கெட் கீப்பர்-பேட்ஸ்மேன் குசல் மெண்டிஸ் இடம் பெறுவார் என்று கூறப்பட்டது.

ஒரு தரப்பு தசுன் ஷனகாவுக்குப் பதிலாக ஆல்ரவுண்டர் தனஞ்சய் டி சில்வா அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்கலாம் என்று கூறப்படுகிறது.

**கேப்டன் பதவியில் இருந்து விலகுகிறாரா ஷனகா..?**

2023 உலகக் கோப்பைக்கு முன்னதாக இலங்கை கேப்டன் தசுன் ஷனகா பதவி விலகுவார் என்ற செய்தி வதந்தி என்று இலங்கையின் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. 2023 உலகக் கோப்பை வரை ஷனகாவை தொடர தேர்வுக்குழு முடிவு செய்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 2023 உலகக் கோப்பைக்கான இலங்கை அணி இன்னும் அறிவிக்கப்படவில்லை. அணியின் பல முக்கிய வீரர்கள் காயமடைந்துள்ளனர், இதில் வனிந்து ஹசரங்கவின் பெயரும் அடங்கும். உலகக் கோப்பைக்கான இறுதி அணியை சமர்ப்பிக்க செப்டம்பர் 28 கடைசி நாளாகும்.

இலங்கை அணியில் பல அனுபவமிக்க வீரர்கள் ஓய்வு பெற்ற பின்னர், இலங்கை கிரிக்கெட் அணியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதில் தசுன் ஷனகா முக்கிய பங்காற்றி வருகிறார். இவரது தலைமையில் கடந்த ஆண்டு ஆசிய கோப்பையை இந்திய அணி வென்றது. இந்தாண்டு தொடர்ந்து 13 ஒருநாள் போட்டிகளில் இலங்கை வெற்றிபெற்றது. உலகக் கோப்பையில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் தென்னாப்பிரிக்கா அணியை அக்டோபர் 7ஆம் தேதி எதிர்கொள்கிறது.

**மோசமான பார்மில் தசுன் ஷனகா:**

தசுன் ஷனகா ஒருநாள் போட்டியில் இந்தியாவிற்கு எதிராக கடந்த ஜனவரி மாதம் சதம் அடித்தார். அதன்பிறகு, 17 இன்னிங்ஸ்களில் பேட்டிங் செய்த அவர், ஒரு அரைசதம் கூட அடிக்கவில்லை. அதேபோல், கடந்த 6 இன்னிங்ஸ்களில் வெறும் 54 ரன்கள் மட்டுமே எடுத்துள்ளார். கடந்த 2022 முதல் 33 போட்டிகளில் வெறும் 489 ரன்கள் மட்டுமே எடுத்துள்ளார்.

ஆசியக் கோப்பை இறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததை அடுத்து தசுன் ஷனகா இலங்கை ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டார். அப்போது பேசிய அவர், "இலங்கை அணியில் ஐந்து முக்கிய வீரர்கள் இல்லாமலேயே இறுதிப் போட்டிக்கு வந்தோம். இரண்டு வருடங்களுக்கு முன்பு நாம் இருந்த நிலைமைக்கு இது ஒரு நல்ல அறிகுறி. எங்கள் ரசிகர்கள் கொடுத்த அளவிளாத அன்பிற்கு நன்றி தெரிவிப்பதோடு அவர்களை ஏமாற்றியதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சாலை பணிகளை பார்வையிட்ட பின்னர் முகாம் அலுவலகத்தில், சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களில் சாலை சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ராம்நகர் பகுதியில் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், மேயர் ஆர்.பிரியா, அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., துணை மேயர் மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் உட்பட அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருமங்கலம் அருகேயுள்ள முத்தப்பன்பட்டியில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியதுடன் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க மூத்த முன்னோடிகள் 1500 பேருக்கு ரூ.10ஆயிரம் அடங்கிய பொற்கிழி வழங்கினார்.



மதுரை மாநகர் மாவட்ட பா.ஜ.க. துணைத் தலைவர் ஜெயவேல் மற்றும் இளைஞர் அணி பாரி ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி பனகல் சாலையில் உள்ள அ.தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை அ.தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். அருகில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை மாதவரம் பால்பண்ணையில் நேற்று பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டு துறை தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயலாட்சியர்களுக்கான பயிற்சி வகுப்பினை அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார்.

# கண்ணாடி பாட்டிலில் பால் விற்பனை செய்வதை நுகர்வோர் விரும்பவில்லை

## ஐகோர்ட்டில் ஆவின் நிர்வாகம் தகவல்

சென்னை, செப். 22-

கண்ணாடி பாட்டிலில் பால் விற்பனை செய்வதை நுகர்வோர் விரும்பவில்லை என ஐகோர்ட்டில் ஆவின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கை நீதிபதிகள் எஸ்.வைத்தியநாதன், பி.டி.ஆஷா ஆகியோர் கொண்ட சிறப்பு டிவிசன் பெஞ்ச் விசாரித்து வருகிறது. விசாரணையின்போது, ஆவின் பாலை பாக்கெட்டுகளில் அடைத்து விற்பதற்கு பதில் கண்ணாடி பாட்டிலில் அடைத்து விற்றால் பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்க்கப்படும். எனவே ஆவின் பாலை பாட்டிலில் அடைத்து விற்க முடியுமா? என்று ஆவின் நிறுவனத்துக்கு நீதிபதிகள் ஏற்கனவே கேள்வி எழுப்பியிருந்தனர். இது தொடர்பாக ஆய்வு நடத்தி அறிக்கையை தாக்கல் செய்ய முன்னதாக உத்தரவிடப்பட்டு இருந்தது.

அதன்படி, ஆவின் நிர்வாக இயக்குநர் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த அறிக்கையில், சென்னை, கோவையில் 7 இடங்களில் ஆய்வு நடத்தியதாகவும், அதில் 5 இடங்களில் பாலை பாட்டிலுக்கு பதில் பிளாஸ்டிக் பாக்கெட்டாக வழங்க வேண்டும் என்று தெரிவித்ததாக கூறப்பட்டு இருந்தது. பாட்டில்களில் பால் விற்பனை செய்தால் விலை உயர்ந்துவிடும் என்பதால், பிளாஸ்டிக் பாக்கெட்டில் விற்கப்படும் பால் தங்களுக்கு போதுமானது என்று தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நுகர்வோரின் விருப்பத்தின் அடிப்படையில், இதனை ஆய்வு செய்து நீதிமன்றம் தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்றும் ஆவின் நிறுவனம் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்ட ஐகோர்ட்டு, வழக்கின் விசாரணையை அக்டோபர் 9-ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளது

### இயற்கை இடர்பாடுகளால் மகசூல் பாதிப்பு:

# 6 லட்சம் சம்பா பயிர் விவசாயிகளுக்கு ரூ.560 கோடி இழப்பீடு தொகை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, செப். 22-

அரசின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டு சம்பா பருவ நெற்பயிரில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட மகசூல் இழப்புக்கு மொத்தம் ரூ.560 கோடி இழப்பீட்டுத் தொகை சுமார் 6 லட்சம் தகுதி வாய்ந்த விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கபட உள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, பயிர் காப்பீட்டுத் திட்டம் தமிழகத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சம்பா நெற்பயிரில், 11.20 லட்சம் விவசாயிகளால் 24.45 லட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டது. மொத்த காப்பீட்டுக் கட்டணத்தில் தமிழக அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.1,375 கோடியும் மத்திய அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.824 கோடியும் விவசாயிகளின் பங்குத் தொகையாக ரூ.120 கோடியும் ஆக மொத்தம் ரூ.2,319 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

2022-2023 ஆம் ஆண்டு சம்பா பருவ நெல் சாகுபடியில் 46 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி அடையப்பட்ட போதிலும், வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்த காரணத்தால் இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தென்காசி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட மிதமான வறட்சியால் 3,52,797 ஏக்கர் பரப்பளவில் 33 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட வேளாண் பயிர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.181.40 கோடி தொகையை தமிழக அரசு 1,87,275 விவசாயிகளுக்கு 4.9.2023 அன்று வழங்கியுள்ளது.

இதனை தொடர்ந்து தற்போது பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட மாவட்டங்களில், வறட்சி, வெள்ளம், புயல், பருவம் தவறிய மழை போன்ற பல்வேறு இயற்கை இடர்பாடுகளால் சுமார் ஏழு லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஏற்பட்ட மகசூல் இழப்பிற்கு, திட்ட விதிமுறைகளின்படி பாதிப்படைந்த பகுதிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் 560 கோடி ரூபாய் சுமார் 6 லட்சம் தகுதி வாய்ந்த விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் வரவு வைக்கப்பட உள்ளது.

இவ்வாறு அந்த அறிவிப்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# பார்லி. தேர்தல்: கோவையில் இன்று கமல்ஹாசன் நிர்வாகிகளுடன் ஆலோசனை

சென்னை,செப். 22-

மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகளுடன் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் இன்று வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்துகிறார்.

பாராளுமன்ற தேர்தல் அடுத்தாண்டு நடைபெற உள்ளதையொட்டி கட்சிகள் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தனது கட்சி நிர்வாகிகளுடன் இன்று (வெள்ளிக்கிழமை) ஆலோசனை நடத்துகிறார். கோவையில் உள்ள மக்கள் நீதி மய்யம் அலுவலகத்தில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மக்களவைத் தேர்தல் குறித்து ஆலோசிக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# தமிழகத்தில் இன்று 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு: வானிலை மையம்

சென்னை, செப். 22-

தமிழகத்தில் இன்று 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- குமரிக்கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி மற்றும் மேற்குதிசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று (22.09.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலை பகுதிகள், நீலகிரி, ஈரோடு, தேனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, சேலம், தாமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நாளை 23-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை பெய்யக் கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 26 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டுக்கு உரிய நீரை...(1-ம் பக்க தொடர்ச்சி)

(1-ம் பக்க தொடர்ச்சி)

கர்நாடகம் அந்த உத்தரவையும் கூட பின்பற்றுவதில்லை. ஒவ்வொரு முறையும் ஒரு உத்தரவை ஆணையம் பிறப்பிக்கும் போதும் ஏதாவது ஒரு காரணத்தை கூறி தமிழகத்துக்கான நீரை கொடுக்க கர்நாடகம் மறுத்து வருகிறது.

மேலும், காவிரி ஒழுங்காற்று குழுதான் தண்ணீரின் அளவு உள்ளிட்ட புள்ளி விவரங்களை கவனத்தில் கொண்டு தண்ணீர் திறப்பதற்கான அளவை நிர்ணயம் செய்கிறது. அவர்கள் தமிழ்நாட்டுக்கு தேவையான தண்ணீரை திறந்து விட போதுமான பரிந்துரைகளை பல்வேறு கட்டங்களாக கொடுத்த போதும் காவிரி மேலாண்மை ஆணையம் அந்த அளவில் இருந்து எப்போதும் குறைத்து தண்ணீரை திறக்க உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு முறையும் 15 ஆயிரம் கன அடி, 10 ஆயிரம் கன அடி, 7200 கன அடி, 5 ஆயிரம் கன அடி, என தொடர்ச்சியாக தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டு கொண்டே வந்துள்ளது. எங்களுக்கு தர வேண்டிய தண்ணீர் அளவு அதிக அளவில் நிலுவையில் உள்ளது.

ஆனால் அதை எல்லாம் நாங்கள் கேட்கவில்லை. தற்போதைக்கு திறந்து விட வேண்டிய தண்ணீரை மட்டுமாவது திறந்து விட வேண்டும் என்றுதான் கேட்கிறோம். மழை பற்றாக்குறை இருக்கிறது என்பதை நாங்களும் ஒத்துக் கொள்கிறோம்.

ஆனால் அதற்காக அவர்களிடம் இருக்கும் நீரை கூட பகிர்ந்து கொடுக்க மாட்டேன் என்றால் எப்படி? நாங்கள் கடைமடை மாநிலமாக இருக்கிறோம். அவர்களுக்கு அவ்வளவு பிரச்சினை என்றால் எங்களுக்கு எவ்வளவு இருக்கும்?

வறட்சியின் பாதிப்பு என்பது அவர்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் தான். கடந்த 12-ம் தேதி கூட்டத்தின் போது, 56 சதவீதம் நீர் பற்றாக்குறை என கூறினார்கள். ஆனால் 6400 கன அடி திறக்க வேண்டும் என காவிரி ஒழுங்காற்று குழு குறிப்பிட்டுள்ளது. ஆனால் 5000 கன அடி என இறுதி உத்தரவில் கூறப்பட்டுள்ளது. புள்ளி விவரத்தை கணக்கிட்டு அதனடிப்படையில் நீர் வழங்க உத்தரவிடப்பட்டும் அதனை கர்நாடகம் செயல்படுத்த மறுக்கிறது என்று வாதிட்டனர்.

அப்போது கர்நாடகா அரசு வக்கீல் கர்நாடகாவில் மழை இல்லை, காவிரியில் நீரும் குறைவாக இருக்கிறது. தமிழகத்துக்கு காவிரி தண்ணீர் விவசாயத்துக்கு மட்டும்தான். ஆனால் கர்நாடகாவை பொறுத்தவரை குடிநீர், விவசாயம் என அனைத்துக்கு நீர் தேவை. அதுதான் எங்களது பிரச்சினை. எங்களால் வினாடிக்கு 2500 கன அடி மட்டுமே தண்ணீர் திறக்க முடியும் என்று வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் ஒழுங்காற்று குழு உத்தரவுகளுக்கு எதிராக தொடரப்பட்ட மனுக்களை விசாரிக்க மறுப்பு தெரிவித்தனர். காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவில் தலையிட முடியாது. காவிரி நீர் மேலாண்மை ஆணையம் 15 நாட்களுக்கு ஒரு முறை கூடி சூழலை ஆராய்ந்து வருகிறது.

மேலாண்மை ஆணையம் மற்றும் ஒழுங்காற்று குழு உத்தரவுகள் மற்றும் பரிந்துரைகளை கர்நாடக அரசு அமல்படுத்த வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதே வேளையில் காவிரியில் 24 ஆயிரம் கன அடி நீரை திறக்க கோரும் தமிழ் நாடு அரசின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு உள்ளது. வறட்சி கால அட்டவணைப்படி தமிழ்நாட்டுக்கான உரிய நீரை கர்நாடகா திறக்க சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது.